விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை (22.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 154

தெற்கில் சீரற்ற காலநிலை

8 பேர் பலி; 22,777 பேர் பாதிப்பு

சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை; நிவாரணம் வழங்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு) தெற்கில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக எட்டுப் பேர் உயிரிழந்ததுடன் 5 ஆயிரத்து 885 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 777 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் நாட்டின் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அனர்த்தங்களுக்கு உள்ளான மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

முன்னர் வந்த செய்தி 03-ம் பக்கத்தில்...

மதுபான நிலையத்தில்

இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள மதுபான நிலையத்தின் முகாமையாளராக பணி புரிந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மதுபான நிலைய 24

இந்திய முக்கியஸ்தர்கள் கேப்பாப்பிலவு மக்களுடன் நேற்றுச் சந்திப்பு

(பனிக்கன்குளம்)

படையினர் சுவீகரித்து வைத்திருக்கும் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக்கோரி போராடிவரும் கேப்பாப்பிலவு மக்களை 23

யானை உயிரிழப்பு

இராணுவ கப்டன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை

(விசுவமடு)

விசுவமடு பகுதியில் யானை உயிரிழந்துள்ளமை தொடர்பில் அப் பகுதி படை முகாமின் 23

நீர்வேலியில் வாள்வெட்டு

முக்கிய சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் வைத்து இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற் கொண்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்று மாலை நீர்வேலிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 02

கோப்பாய் இராணுவ முகாம் காணியில் யாழ்.சிறையை மாற்றுக

யாழ். அபிவிருத்திக்குழு கூட்டத்தில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர அபிவிருத்திக்கு பண்ணை பகுதியில் உள்ள சிறைச்சாலை காணி தேவைப்படுவதால், சிறைச்சாலையை கோப்பாயில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணிக்குள் மாற்றுமாறு யாழ் மாகாணசபை உறுப்பினர் கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் யாழ்ப்பாண சிறைச்சாலை அமைந்துள்ள காணி சிறைச்சாலைக்குரியது என்றும் அதன் உறுதி தொலை 02

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கத்திமுனையில் கொள்ளை

ஓர் இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பறிபோனது மல்லாவியில் நேற்று அதிகாலை சம்பவம்

(மல்லாவி)

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஓர் இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பணம் கத்திமுனையில் கொள்ளையிடப்பட்டது என மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்குளம் – மல்லாவி வீதியில் ஒட்டறத்தகுளம் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனத்தில் வந்த கொள்ளையர்கள் இருவர், டீசல் நிரப்பவேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரை தூக்கத்திலிருந்து எழுப்பியுள்ளனர். 02

விவசாய உரம் அத்தியாவசிய பொருளாகிறது

(கொழும்பு)

விவசாயத்திற்கு பயன்படுத்தும் உரத்தை அத்தியாவசிய பொருளாக குறிப்பிட்டு அதனை வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

வர்த்தகர்களால் விவசாயிகளுக்கு கூடுதலான விலைக்கு உரம் விற்பனை செய்யப்படு 02

சுன்னாகம் பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் சந்தேகநபர் சித்திரவதை

பொலிஸாரின் பிணை யாழ். மேல் நீதிமன்றத்தால் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலிலிருந்த சந்தேகநபர் ஒருவரை சித்திரவதை செய்த குற்றத்துக்காக 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையை அனுபவித்துவரும் தண்டனைக் கைதிகளான சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாரும் முன் வைத்த பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மீண்டும் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி சுன்னாகம் பொலிஸாரால் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த எஸ். சுமணன் முதலாவது சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் விசாரணைக்காக 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மாலை கிரி நொச்சி, வட்டக்கச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது 23

4.7 மில்லியன் பெறுமதியான

தங்கக்கட்டிகளுடன் இருவர் நேற்று கைது

(கொழும்பு)

4.7 மில்லியன் பெறுமதியான தங்கக்கட்டிகளை சட்டவிரோதமாக எடுத்துவந்த இருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சிங்கப்பூரில் இருந்து நேற்று காலை வருகை தந்த மாத்தறை பகுதியை சேர்ந்த 55 வயதுடைய ஒருவரும், மட்டக்களப்பு பகுதியை சேர்ந்த 52 வயதுடைய 23

குருநகரிலுள்ள கடற்படையினர் இரு மாதங்களுக்குள் வெளியேற வேண்டும்

அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குருநகர் இறங்கு துறைக்கு அருகில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் இரு மாதங்களுக்குள் வெளியேற வேண்டும் என யாழ்ப்பாண பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. அதன்போதே மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குருநகர் இறங்குதுறை பகுதியில் உள்ள மீனவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். மீனவர்கள் தங்கி நிற்பதற்கு போதிய இடவசதிகள் இல்லை, படகுகளை திருத்துவதற்கான இடம் 23

கூட்டரசுக்கு எதிராக ஜூன் மாதம் முதல் ஆர்ப்பாட்டங்கள்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசாங்கம் சட்டவிரோதமானது எனவும் அது அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமாக செயற்படுவதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் 23

மண்டைதீவு காணி சுவீகரித்தால் மக்கள் போராட்டம் வெடிக்கும்

மாகாண சபை உறுப்பினர் விந்தன்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பகுதியில் கடற்படை முகாம் அமைப்பதற்கு பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் செயற்பாட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், காணி சுவீகரிக்க முற்பட்டால் பொதுமக்களை ஒன்று திரட்டி பாரிய போராட்டத்தை முன் னெடுப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவு பகுதியில் இலங்கை கடற்படையின் வெலுசுமன படைப் பிரிவின் பிரதான முகாம் அமைப்பதற்கு காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் 23

நல் ஆரோக்கியத்திற்கு

"றோயல் சுத்தமான தேன்"

உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி "ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிட்ப்படுகின்றது.

Packed By: Royal Industries

Marketed By: சிவா நறுமணப் பூங்கா
இல.288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2567

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-2677)

உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள O/L, A/L படித்தவர்களுக்கான 13 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன. உங்களுக்கு தகைமை இருப்பின் தொலைத்தொடர்பினை ஏற்படுத்தி முற்பதிவுகளை செய்து கொள்ளவும்.

வயதெல்லை 18-35

076 666 8385
077 848 5328

(4163)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்-2016

வியாபார முகாமைத்துவமானிக் கற்கைநெறி (வெளிவாரி)

1.முதலாம் வருட் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை-2016
2.இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை-2016
3.மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை-2016

மேற்படி பரீட்சைகளினை 26.05.2018 (சனிக்கிழமை) தொடக்கம் 01.07.2018 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 24.05.2018 (வியாழக்கிழமை) தொடக்கம் 25.05.2018 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
17.05.2018 (சி-2680)

கேள்வி அறிவித்தல்

சபை நிதி-2018

பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி

01.தலைவர், பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி, வடமராட்சி, தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.

02.தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. எனினும் பொதுநிதிச் சுற்றறிக்கை இல. 04/2016 (1) இற்கமைவாக இவ்விலை மனுகோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமராட்சி நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடிபொருத்தமானதரத்தில் இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் **தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி. (தொலைபேசி, தொலைநகல்: 021-2263276 மின்னஞ்சல் (pointpedrops@gmail.com)** இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணிமுதல் பி.ப.14.00 மணிவரை, 04.06.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06.ஆர்வமுள்ளகேள்வி தாரர்கள் பூரணமான கேள்வி ஆவணத்தை ஆங்கிலமொழியில் **தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை,புலோலி** எனும் இடத்திலிருந்து. **22.05.2018**ந் திகதி தொடக்கம் **05.06.2018**ந் திகதிவரைகாலை **09.00** மணிக்கும் பி.ப. **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **2,000/-** செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி** எனும் முகவரிக்கு **07.06.2018** ஆம் திகதி பி.ப.**14.30** மணிக்குமுன்பதாகக்கிடைக்கக் கூடியதாக இடதுபக்கமேல் மூலையில் வேலையின் பெயரையும் குறிப்பிட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை தனித்தனியாக இரு கடித உறையிலிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது,கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து அட்டவணையில் காட்டப்பட்டவாறு செல்லுபடியாகும்.

09.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி எண்	வேலைவிபரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் (வற் தவிர்ந்த)	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
					பிணை வைப்பு (ரூபா)	செல்லு படியாகும் காலம்
NP/14/41(11)/2/ Council/2018/01	நீர்வளைப் பிள்ளையார் கோயில் வீதியமைத்தல்	2.52	2மாதம்	C8	25250.00	23.07.2018
NP/14/41(11)/2/ Council/2018/02	பணிக்கர் கோயில் பேச்சியம்மன் கோயில் வீதியமைத்தல்	1.17	2மாதம்	C9	11800.00	09.07.2018
NP/14/41(11)/2/ Council/2018/03	வட்டுவனை வீதியமைத்தல் (புலோலிதென் மேற்கு)	1.75	2மாதம்	C9	17600.00	09.07.2018
NP/14/41(11)/2/ Council/2018/04	விதானையார் வீதியமைத்தல் (புலோலிதெற்கு)	0.93	2மாதம்	C9	9350.00	09.07.2018
NP/14/41(11)/2/ Council/2018/05	கற்கோவளம் தீர்த்தக்கடற்கரை வீதியமைத்தல்	3.81	2மாதம்	C8	38150.00	23.07.2018
NP/14/41(11)/2/ Council/2018/06	கெருடாவில் தெற்குவாய்க்கால் அமைத்தல்	0.79	2மாதம்	C9	8000.00	09.07.2018

10.கேள்விகோரல் பற்றியமுன்கூட்டிய கூட்டம் **30.05.2018**ந் திகதி **14.30** மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழாங்கப்பட மாட்டாது.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

22.05.2018 (சு-2682)

முக்கிய சந்தேக நபர்...

அத்துடன், குறித்த நபர் பயணித்திருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை இளைஞர்கள் இருவர் மீது ஒரு குழுவால் வாள்வெட்டு நடத்தப்பட்டது.அத்துடன் அங்கிருந்த துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை கிணற்றுக்குள் போட்டுவிட்டு அக் குழுவினர் தப்பி சென்றனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இணுவிலைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தொடர் விசாரணைகளின் அடிப்படையில் முக்கிய நபர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கொக்குவில் கிழக்கை சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கார் ஒன்றில் சில இளைஞர்கள் தாவடி பகுதியில் நின்றுள்ளனர். அங்கு பொலிஸார் சென்று மேற்குறித்த நபரை விசாரணை செய்துள்ளனர். அப்போது காரில் இருந்த நபர்கள் தப்பி ஓடியுள்ளனர். பின்னர் குறித்த இளைஞரை பொலிஸார் கைது செய்ததுடன் கார், மோட்டார் சைக்கிள் என்பவற்றை கைப்பற்றிச் சென்றுள்ளனர். (ம-9)

எரிபொருள் நிரப்பு...

டீசல் நிரப்புவதற்காக சென்ற பணியாளருக்கு கத்தியைக் காட்டி மிரட்டிய கொள்ளையர்கள் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இட்த்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

கோப்பாய் இராணுவ...

நந்து விட்டதாகவும் அதை உறுதிமுடித்து தரும்படி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கோரியிருந்தனர்.

இதன்போதே மாகாண சபை உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதாவது கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் 25 ஏக்கர் காணியில் அமைந்திருந்தது. அதை பின்னர் இராணுவத்தினர் கைப்பற்றியதுடன் மேலதிகமாக 25 ஏக்கரையும் பிடித்து தற்போது 50 ஏக்கரில் இராணுவ முகாம் அமைத்துள்ளனர். அந்த காணியில் சிறைச்சாலையை அமைப்பது தொடர்பாக பரிசீலனை செய்யுங்கள் என தெரிவித்தார்.

அவ் விடயம் தொடர்பாக தொடர்ந்து பதிலளித்த, ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரான மாவை சேனாதிராஜா, குறித்த சிறைச்சாலையை உரிய முறையில் அனுமதி பெறாது நகரின் மத்தியில் கட்டப்பட்டமை தொடர்பாக தற்போது பிரச்சினை எழுந்துள்ளது. சிறைச்சாலையை வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பாக பரிசீலனை செய்து வருகிறோம்.

யாழ் நகர் அபிவிருத்தியின் படி அப்பகுதியில் குறித்த சிறைச்சாலை அமைப்பது தவறு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக சிறைச்சாலை அமைச்சுக்கு அறிவிக்குமாறும். அவர்களிடம் தாம் பேசுவதாக தெரிவித்தார். (ம-9)

விவசாய உரம்...

வதை தடுக்கும் முகமாக விவசாய அமைச்சு இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது

இவ்வாறு மத்திய விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் இந்த வாரத்தில் வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

விவசாய அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ம)

யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
பகிரங்க ஏல விற்பனை

எமது கல்லூரியில் பாவனைக்கு உதவாத பொருட்கள் சில, எதிர்வரும் 04.06.2018 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

(4095)

அதிபர்

ஆறு பேர் உயிரிழப்பு!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை 1024 பேர் இடம்பெயர்வு; 13,314 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இது வரை 1024 பேர் இடம் பெயர்ந்துள்ளதாகவும் 13,314 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சீரற்ற கால நிலையால் ஆறுபேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி தற்காலிகமாக பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை, சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இரத்தினபுரி, களுத்துறை, காலி, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக லக்ஷபான நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் இரண்டும், தெதுரு ஓய மற்றும் உடவல நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் இரண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை அடுத்து வரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

அரசால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும்

அமைச்சர் மனோ நம்பிக்கை

(கொழும்பு)

இந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நாளை, நாளை மறுநாள் அல்லது அடுத்த வாரம் அல்லது அடுத்த வருடம் என்றாவது ஒருநாள் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது.

இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினை தீரும் என்று நம்புகின்றேன். அந்தக் கனவு என்றாவது ஒரு நாள் நனவாகும். வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு போர்க்குற்ற விசாரணை நடத்த தேவையில்லை என நான் ஒருபோதும் கூறவில்லை. எனது கருத்து தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. வேண்டுமென்று சிலரால் திரிவுபடுத்தி மக்கள் முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பிரதேசத்துக்கு பிரதேசம், மொழிக்கு மொழி மாறி மாறி கருத்துக்களைப் பேசுபவன் நானல்ல. இலங்கையின் உள்நாட்டு பிரச்சினை நாட்டுக்கு வெளியே சென்று பேசப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, நடைமுறையில் அது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்என்று சொன்னேன்.

வட கிழக்கு இணைக்கப்படல் வேண்டும் என்பதே எனது கருத்தாகும். அந்த இணைப்புக்காக கிழக்கு மாகாணத்தில் வாழக்கூடிய மக்கள் ஆதரவளிக்க வேண்டும். ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வட கிழக்கு இணைப்புக்கு கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கின்றதா? இல்லையா? என்பதை பார்க்க வேண்டும். கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் சமமாக வாழ்கின்றார்கள். அதற்காக ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், அரச கருமமொழிகள் அமைச்சர் என்ற வகையிலே இன பதற்றம் இனச் சிக்கல் பிரிவினையை ஏற்படுத்துவதற்கான அடிப்படைக் காரணங்கள் தோன்றக் கூடாது என விரும்புகின்றேன். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எனது பயணத்தை யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

இந்த நாடு பல்லின பன்மொழி பல சமயங்கள் பேசப்படும் கடைப்பிடிக்கப்படும் பல இனங்கள் வாழும் நாடாகும். பன்முகத்தன்மை என்பது எமது எதிர்காலமாகும்.

ஆகவே எதிர்காலத்தை சரியான முறையில் அறிந்து கொண்டு புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய கடமைப்பாடு எமக்கு இருக்கின்றது.

ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம் என்றால் இந்த நாடு துண்டு துண்டாக பிளவுபடும். இதனை நான் சொல்லவில்லை.

எனக்கு முன்னுள்ளோர் சொன்ன விடயமாகும். அதனை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

சில முட்டாள்கள் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே இனம் என்ற நடைமுறையைக் கொண்டு வரப்பார்க்கின்றார்கள். அல்லது பெரும்பான்மை மதம், பெரும்பான்மை இனம் எனக் கொண்டு வரப்பார்க்கின்றார்கள்.

பெரும்பான்மை மக்களுக்கு கீழ் படிந்துதான் தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க மக்கள் நடந்து கொள்ள வேண்டுமென நினைக்கின்றார்கள். அதற்கு இடமளிக்க முடியாது.

நாட்டில் ஐக்கியம் வேண்டும். ஒற்றுமை வேண்டும் என்பதற்காக எங்களது தன்மானத்தையும் சுயமரியாதையையும் ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது.

தன்மானத்தையும் சுயமரியாதையையும் இல்லை பேசி விற்று விற்றுத்தான் இந்த நாட்டில் ஐக்கியம் வர வேண்டும்என்றால் அந்த ஐக்கியம் எமக்குத்தேவையில்லை என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

ராஜிதவின் பட்டியலுக்கு கத்திரிபோட்ட மைத்திரி

(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 70ஆவது மாநாட்டில் பங்கேற்பதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுடன் மாநாட்டில் பங்கேற்பதற்கான பிரதிநிதிகள் பட்டியலின் எண்ணிக்கை இருபதிலிருந்து 14 ஆக குறைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி, மைத்திரிபால சிறிசேன இது தொடர்பில் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் 6 பேரின் பெயர்களை ஜனாதிபதி நீக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் இவ்வாறு பெரிய குழுவொன்று இலங்கை சார்பில் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுகாதாரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்களும் இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை பிரதி சுகாதார அமைச்சரும் உறுதிப்படுத்தியுள்ளார். (இ-7)

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோருக்கு பருத்தித்துறை பிரதேச சபையில் அஞ்சலி

(கரணவாய் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு பருத்தித்துறை பிரதேசசபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை தவிசாளர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஆளும்கட்சி உறுப்பினர் சுரேஸ்குமார் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என பிரேரணை கொண்டுவந்தார்.

இதனையடுத்து அனைவரும் எழுந்து நின்று உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். (இ-60)

வரிச்சுமையை நீக்கக்கோரும் ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம் இரத்து

(கொழும்பு)

"வரிச்சுமையை நீக்கு! பொருட்களின் விலைகளை குறை!" எனும் தொனிப்பொருளில் ஜே.வி.பியினால் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம், பேரணி மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியன ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

அனர்த்த நிலையை எதிர்கொள்வதற்கு முன்னேற்பாடுகள்

அமைச்சர் துமிந்த தகவல்

(கொழும்பு)

திடீர் அனர்த்த நிலை ஏற்படும் பட்சத்தில் அதனை எதிர்கொள்வதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொண்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்ட பிரதேச செயலாளர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேவையான நிதியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

நீரிழிவுப் பாதிப்புக்களுக்கு ஆயுர்வேத மருத்துவம்

ஆரம்ப - நாட்பட்ட நீரிழிவுப் பாதிப்புக்கள் அதிகதாகம், அதிக பசி, அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல், இளைப்பு, களைப்பு, நரம்புப் பாதிப்புக்கள் (Diabetic neuropathy), கை - கால் விறைப்பும் உணர்வற்ற நிலையும் (Numbness of hands and legs), சமிபாட்டுக் குழப்பம், மலச்சிக்கல், அதிக இரத்தக் கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம், இதய இரத்தக் குழாய் அடைப்பு (Coronary heart disease), இதய வலி (Chest pain / Angina) சிறுநீரகப் பாதிப்புக்கள் (Diabetic nephropathy), சிறுநீரில் ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் (Renal infections), மற்றும் சிறுநீரில் அதிகளவு புரோட்டின், யூரியா அதிக அளவில் காணப்படுதல் போன்ற நீரிழிவுப் பாதிப்புக்களிற்கு ஆயுர்வேத முறைப்படி மருந்து, உணவு, வாழ்க்கை முறை போன்ற ஆலோசனைகளுடன் சிகிச்சை பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966, Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251

யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், மலசலகூட பராமரிப்பு என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

கேள்வி அறிவித்தல் - 2018

(01.07.2018 - 31.12.2018)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.07.2018ம் திகதி முதல் 31.12.2018ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 500.00 (வரி நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 22.05.2018 - 07.06.2018 (மு.ப 9.00- பி.ப 3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 08.06.2018 மு.ப 9.30 மணி வரை
கேள்வி திறத்தல் - 08.06.2018 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 08.06.2018ம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

நிபந்தனைகள்:

1. சித்திபெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 2/3 பகுதியை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். 2/3 பகுதியை செலுத்தியவர்கள் மிகுதித் தொகையை ½ பங்குப்படி ஆடி தொடக்கம் ஆவணி வரையான 2 மாத காலப் பகுதிக்குள் 2018 ஆடி முதல் ஆவணி வரை ஒவ்வொரு மாதமும் அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாத குத்தகைப் பணத்தின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.
2. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருப்பதுடன் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் மூலம் உறுதிப் படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை உரியவர் நேரடியாக சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள், மாநகரசபைக்கு எந்தவித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருந்தால், கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.
4. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு கேள்விதாரர் சித்தியடைந்திருப்பின் ஒரு கடை மாத்திரமே குத்தகைக்கு வழங்கப்படும் என்பதுடன் அது எத்தகைய கடை என்பது பற்றிய இறுதி முடிவு சபையினதாகும். அடுத்த நிலையில் உள்ள கேள்விதாரரின் சித்திகரத்தன்மை அவரது கேள்வித்தொகை, அனுபவம், சபையுடனான நல்லுறவு என்பவற்றை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படலாம்.
5. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4 சதவீத கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூபா 50.00 பெறலாம், மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடப்படலாகாது.
6. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00ம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடப்படலாகாது.
7. சபையின் கடைகளில் இறைச்சி/கருவாடு/கோழி ஆகியன விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகையை செலுத்துதல் வேண்டும்.
8. அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பிப்பவர்களுக்கே குத்தகை வழங்கப்படும். அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத் தவறின், அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்திப்படக்கூடிய வகையில் அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
9. சிற்றுண்டிச்சாலைகளைக் குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

9.1 சிற்றுண்டிச்சாலை காலை 07.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.

9.2 சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.

9.3 மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூபா 20,000.00 ஐயும் உடனடியாகவே செலுத்துதல் வேண்டும்.

10. கேள்விப் படிவக் கட்டணம்., கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு அக்காலப்பகுதிக்குரிய VAT, NBT சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.
11. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர்கள் விரும்பினால் சந்தை வளாகத்தில் இடமிருக்கும் பட்சத்தில் அல்லது பிறிதொருவரின் காணியில் அனுமதியுடன் கூடாரம் இட்டு மைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை தங்களது செலவில் அமைத்து நடத்தலாம். எனினும் இந்நிலையத்தில் விடப்படும் சைக்கிள்களுக்கு குத்தகையாளர்களே பொறுப்பு என்பதுடன் மேலே இல.6 இல் குறிப்பிட்ட பாதுகாப்பு கட்டணங்களையே அறவிடப்பட முடியும்.
12. இறைச்சிகள் மற்றும் உணவு பொருட்களுக்கு மாவட்ட விலை நிர்ணயக் குழுவால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனை செய்யப்படல் வேண்டும்.
13. சபையால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகளிலிருந்து ½ Km சுற்றுவட்டத்துக்குள் குறித்த இறைச்சி வகை, மீன் வகை, மரக்கறி வகை எது பொருத்தமானதோ அதனை விற்பனை செய்தல் ஆகாது.
14. வெள்ளிக்கிழமை, பூரணை தினங்கள் மற்றும் அரசால் அறிவிக்கப்படும் தினங்களில் இறைச்சிக்கடைகள் பூட்டப்படல் வேண்டும்.
15. கடைகள் மற்றும் சந்தைகள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும். அதனை சித்திகர கேள்விதாரர் பார்வையிட்ட பின்னர் திருப்தி கொண்டே ஒப்பந்தம் செய்ததாகக் கருத்திற் கொள்ளப்படும்.
16. துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின்போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி கோருபவர் யாழ். நகரப்பகுதியில் அல்லது ஆகக்கூடியதாக நகரத்தின் மையத்திலிருந்து 10km சுற்றுவட்டத்தில் நிரந்தர உணவகம் வைத்திருத்தல் வேண்டும்.
17. வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய கால்நடைகள் கொண்டுவருவது குத்தகையாளரது பொறுப்பே ஆகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
18. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை காரணங்காட்டாது ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணம் மாநகரசபைக்கே உரியது.

இறைச்சிக்கடை குத்தகை - 2018

தொ. இல	இறைச்சிக் கடை	கடை இல.	மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப் பணம்	ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக)
1	பண்ணை ஆட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	96,075.00
2	பண்ணை கருவாட்டுக்கடை	இல.02	5,000.00	30,712.50
3	பண்ணை ஆட்டிறைச்சிக்கடை	இல.03	5,000.00	109,620.00
4	பண்ணை ஆட்டிறைச்சிக்கடை	இல.04	5,000.00	124,488.00
5	பண்ணை ஆட்டிறைச்சிக்கடை	இல.05	5,000.00	81,637.50
6	பண்ணை ஆட்டிறைச்சிக்கடை	இல.06	5,000.00	39,480.00
7	பண்ணை கோழிக்கடை	இல.07	5,000.00	460,078.50
8	பண்ணை ஆட்டிறைச்சிக்கடை	இல.08	5,000.00	43,102.50
9	பண்ணை மாட்டிறைச்சிக்கடை	இல.09	5,000.00	460,451.25
10	பண்ணை மாட்டிறைச்சிக்கடை	இல.10	5,000.00	466,378.50
11	செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	75,600.00
12	பாசையூர் மாட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	421,470.00
13	பாசையூர் மாட்டிறைச்சிக்கடை	இல.02	5,000.00	256,095.00
14	புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	48,525.75
15	புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	165,375.00
16	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	416,351.25
17	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.02	5,000.00	160,177.50
18	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.03	5,000.00	132,221.25
19	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.04	5,000.00	189,000.00
20	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.05	5,000.00	168,000.00
21	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.06	5,000.00	118,177.50
22	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.07	5,000.00	118,125.00
23	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.08	5,000.00	105,078.75
24	நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை	இல.09	5,000.00	116,707.50
25	நாவாந்துறை கோழிக்கடை	இல.10	5,000.00	182,175.00
26	நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை	இல.11	5,000.00	31,374.00
27	நாவாந்துறை கருவாட்டுக்கடை	இல.12	5,000.00	6,059.81
28	அரியாலை மாட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	297,407.25
29	அரியாலை ஆட்டிறைச்சிக்கடை	இல.01	5,000.00	37,852.50
30	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.01	7,000.00	280,486.50
31	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.02	7,000.00	294,635.25
32	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.03	7,000.00	213,018.75
33	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.04	7,000.00	228,149.00
34	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.05	7,000.00	249,637.50
35	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.06	7,000.00	278,570.25
36	குருநகர் மாட்டிறைச்சிக்கடை	இல.07	7,000.00	214,515.00
37	குருநகர் பன்றி இறைச்சிக்கடை		5000.00	35000.00

பொதுச்சந்தைக் குத்தகை - 2018

தொ. இல	பொதுச் சந்தைகள்	மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப் பணம்	ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக)
1	பெரியகடை மரக்கறிச் சந்தை	10,000.00	663,300.00
2	பண்ணை மீன் சந்தை	10,000.00	1,839,915.00
3	குருநகர் மீன் சந்தை	10,000.00	1,161,588.75
4	நாவாந்துறை மீன் சந்தை	10,000.00	287,778.75
5	அரியாலை மீன் சந்தை	1,000.00	35,348.25
6	பாசையூர் மீன் சந்தை	2,000.00	169,575.00
7	சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை	1,000.00	34,492.50
8	பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை	1,000.00	30,403.44
9	புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்திகளின் அறிமுகச் சந்தை	2,000.00	4,264.31
10	இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகனதரிப்பிட பாதுகாப்பு நிலையம்	1,000.00	31,500.00
11	யாழ் கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை	1,000.00	174,478.50
12	யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை	5,000.00	126,000.00
13	துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நிகழ்வு நடக்கும் நாள் ஒன்றுக்கு)	1,000.00	817.32
14	பொது மலசலகூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவை	2,000.00	78,750.00
15	நீதிமன்ற துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்	2,000.00	46,427.35

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம். 2018.05.22

இ.த.ஜெயசீலன், மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம் மாநகர சபை

(C-2683)

(கேலிச்சித்திரம்)

நாட்டை முன்னேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதிகள் உருவாக வேண்டும்-கோத்தா

(தொழும்பு)

நாட்டினுள் ஸ்திரத் தன்மை மற்றும் பாதுகாப்பு போதுமானதாக இல்லை எனின் முதலீட்டாளர்கள் இந்நாட்டிற்குள் முதலீடு செய்ய வரமாட்டார்கள் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டை முன்னேற்ற திறமையான மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதிகள் உருவாக வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பதுளை பகுதியில் நேற்று இடம்பெற்ற "வியத் மக" எனும் கருத்தரங்கில் உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

மஸ்கெலியா சாமிமலையில் சீரற்ற காலநிலையால் 10 குடும்பங்கள் பாதிப்பு



(ஹற்றன்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மஸ்கெலியா சாமிமலை தோட்டப்பகுதியில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையின் காரணமாக குடியிருப்புக்கு அருகாமையிலுள்ள கால்வாய் ஒன்று பெருக்கெடுத்ததன் காரணமாக 10 குடியிருப்புக்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களையும் மஸ்கெலிய சாமிமலை தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஞாயிறு தினங்களில் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதை நிறுத்த அஸ்கிரிய பீடம் கோரிக்கை

(கொழும்பு)

அறநெறிப் பாடசாலைகளால் நடத்தப்படுகின்ற ஞாயிறு தினங்களில் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதை நிறுத்துமாறு அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஞாயிறு தினங்களில் பிள்ளைகளுக்கு நடத்தப்படும் அறநெறி பாடசாலைகளால் அவர்களிடத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அஸ்கிரிய பீட மகாநாயக்கர் தெரிவித்துள்ளார்.அஸ்கிரிய விகாரையின் மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு

உரையாற்றும் போதே தேரர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அறநெறி பாடசாலைகளை ஞாயிறு தினங்களில் நடத்துவது தற்போது சவாலான விடயமாக மாறியுள்ளதாகவும் தேரர் சுட்டிக் காட்டினார். (இ-7)

இந்துமா மன்றத்திற்கு புதிய தலைவர் நியமனம்

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவராக இருந்து, கடந்த 18.02.2018 அன்று இறையடி சேர்ந்த அமரர்.கந்தையா நீலகண்டனின் மறைவையொட்டி ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முகாமைப் பேரவைக் கூட்டத்தில் பிரதித் தலைவர் மா.தவயோக ராஜா இந்துமா மன்றத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்பட்ட பிரதித் தலை வர் வெற்றிடத்திற்கு மாமன் றத்தின் துணைத் தலைவர்க ளில் ஒருவரான சின்னத் துரை தனபாலா ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ-7)

ஆலயத்திற்கு நிதியுதவி வழங்கல்

(கரணவாய்)

வடமராட்சி செம்பியன் பற்று மானியவளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு கரவெட்டி பிரதேசசபையின் தவிசாளர் தனது சொந்த நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆல யத்திற்கு சென்ற தவிசாளர் த.ஜங்கரன் ஆலயத்தினை பார்வையிட்டதுடன் நிதி யினையும் கையளித்தார்.

இந் நிகழ்வில் பருத்தித் துறை பிரதேசசபையின் உறுப்பினர் பிரசாந்தனும் கலந்து கொண்டிருந்தார். (இ-60)

தேர்த்திருவிழா பண்ணிசையரங்கு

(யாழ்ப்பாணம்)

மாதகல் அரசடிசித்தி விநாயகர் தேவஸ்தான தேர்த்திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

சுவாமி தேரில் ஆரோகணிக்கும் வேளை ''பண்ணிசைப் பாவலன்" க.லோகேஸ்வரனின் பண்ணிசையரங்குடக்கூத்தியசகிதம்ஆலய பிரதான மண்டபத்தில் இடம் பெறும். (இ

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கின் அபிவிருத்தி, இந்து மத அலுவல்கள் அமைச்சு

புனர்வாழ்வு அதிகாரசபையின் சுயதொழிற் கடன் திட்டத்தின் பயனாளி களான மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்கள், சமூகத்துடன் மீளிணைக்கப்பட்ட பயனாளிகள் ஆகியோரின் உற்பத்திப் பொருட்களின்

கண்காட்சியும் மலிவு விற்பனையும்

மே மாதம் 25, 26 ஆம் திகதிகளில் 2018 சங்கிலியன் தோப்பு நல்லூர், யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சின் அமைச்சர்

கௌரவ டி. எம்.சுவாமிநாதன் (பா.உ)

அவர்களால் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர்

திருமதி. கலாநிதி. பொன்னையா சுரேஸ்

அவர்களின் பங்குபற்றுதலுடன் 25 ஆம் திகதி 2018 அன்று, காலை 10.00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

தலைவர்
புனர்வாழ்வு அதிகாரசபை. (பி-2678)

மேஷம்

கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள், சுவாரஸ்யமான நாள், தேகநலன் சீராகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

ரிஷபம்

சந்தித்தவர்களால் சந்தோசம் இடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு.

மிதுனம்

தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வீட்டில் விருந்தினர் வருகை யுண்டு, ரோக பயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

கடகம்

சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

சிம்மம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

கன்னி

விருப்பங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

துலாம்

குடும்பத்தினரிடையே நிலவி வந்த குழப்பங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

விருச்சிகம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சேமிப்புகள் உயரும் வாய்ப்புண்டு, தொட்ட காரியத்தில் வெற்றி கிடைக்கும்.

தனுசு

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

மகரம்

சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

கும்பம்

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

மீனம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்ச்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தில் போது பொருட்களில் கவனம் தேவை.

		சூரி புத	சுக்
	இராசி பலன்		ராகு
கேது செவ்	பிரகதிலை சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம்		சந்
குரு		குரு	

22.05.2018

வைகாசி 08, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

அட்டமி பின்னிரவு 12.25 மணிவரை

மகம் பின்னிரவு 12.09 மணிவரை

சூலநேரம் 10.22-11.52 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

வளவன்



யாழ்ப்பாணம், நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 28 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் , 29 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

பாடல் போட்டி

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் பாடல் கலையினை வளர்த்தெடுக்கும் நோக்கில் பாடல் போட்டியொன்று எதிர் வரும் 26 ஆம் திகதி சனிக்கி ழமை காலை 9 மணியிலி ருந்து கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள 'திவ்ய மஹால்' திருமண மண்டபத்தில் நடத்த வுள்ளது.

வயது வேறுபாடின்றி ஆண்,பெண் இருபாலாரும் இப் போட்டியில் பங்குபற்ற லாம். மேலதிக தகவல்களை 077 652 4775 என்னும் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது. (இ

பசுவதைக்கு எதிராக சாவகச்சேரியில் ஆர்ப்பாட்டம்

படங்கள்:-கிஷோர், சோபிகா

(சாவகச்சேரி)

பசுக்கள் வதை செய்யப்ப டுவதற்கு எதிராகவும் இறைச் சிக்காக வெட்டப்படுவதற்கு எதிராகவும் தென்மராட்சி பொது அமைப்புக்கள் சாவ கச்சேரியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டன.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தி யசாலைக்கு முன் போராட்ட த்தை ஆரம்பித்து நகரசபையை சென்றடைந்தனர்.

பசுக்களை வதைக்காதே, இறைச்சிக்காக பசுக்களை வெட்டுவதை நிறுத்து, இறை ச்சிக்கடைகளை நிரந்தரமாக மூடு போன்ற கோசங்களை கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்த வர்கள் எழுப்பியிருந்தனர்.

இதன்போது சாவகச்சேரி பிரதேச செயலருக்கும் நகரா ட்சிமன்றத் தவிசாளருக்கும் பசு வதைக்கு எதிராகவும் இறைச் சிக்கடைகளை நிரந்தரமாக மூடுமாறு கோரியும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. (இ-9-89)

ஆட்டோ விபத்து; இருவர் காயம்

(கரணவாய்)

ஆட்டோ ஒன்று கம்பத் துடன் மோதி விபத்திற்குள் ளானதில் இருவர் காயங் களுக்குள்ளாகினர்.

நேற்று திங்கட்கிழமை காலை பருத்தித்துறை- யாழ் ப்பாணம் பிரதான வீதியில் புத்தூர் சந்திக்கு அருகா மையில் நடந்த இவ் விபத் தில் ஆட்டோ சாரதி உட்பட இருவர் காயமடைந்ததோடு ஆட்டோ பலத்த சேதமடைந் தது. (இ-60)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க வள்ளுவர் விழா ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க மும் சிவகனோசர் புலமையக மும் இணைந்து நடத்தும் திருவள்ளுவர்விழா எதிர்வரும் 27.05.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் விரிவுரையாளர் ச. லலீசன் தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மலையகக் கிராமிய நடனம், திருக்குறளும் முகாமைத்துவமும் என்ற பொருளில்அமைந்த ஆய்வரங் கம், கொட்டகலை ஆசிரிய கலா சாலை ஆசிரியர்கள் வழங்கும் நாட்டிய நாடகம் என்பன இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் தொடக்கவு ரையை தமிழ்ச்சங்கத்தின் உப தலைவர் பேராசிரியர் மஹேசன் மணி சண்முகதாஸும் சிறப்பு ரையை வள்ளுவரின் முற்போ க்குச் சிந்தனைகள்என்ற பொரு ளில்கொட்டகலை ஆசிரிய கலா சாலை அதிபர் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஆற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரி யர் தி.வேல்நம்பி தலைமையில் வள்ளுவர் வழி முகாமைத்து வம் என்ற பொருளில் ஆய்வர ங்கம் இடம்பெறவுள்ளது.

இதில் திருக்குறளில் திட்ட மிடல் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவேசனும், திருக்குறளில் ஒழுங்கமைத்தல் என்ற பொரு ளில் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் பாரதி கெனடியும் திருக்குறளில் ஆட்சேர்ப்பு என்ற பொருளில்திற ந்த பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.சிவலோகதாசனும் திருக்கு றளில்வழிநடத்தல் என்ற பொரு ளில் யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும் திருக்குறளில் கட்டுப்படுத்தல் என்ற பொருளில் கலாநிதி எம்.பி.எம்.இஸ்மாயிலும்உரை யாற்றவுள்ளனர். ஆய்வரங் கில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரை களின் தொகுப்பு நூல் வள்ளு வர்வழி முகாமைத்துவம் என்ற பெயரில் நூலாக வெளி யிடப்படும். இதனை தமிழ்ச்சங் கத்தின் பெருந்தலைவர் பேரா சிரியர் அகிலன்முகதாஸ் வெளி யிட்டு வைப்பார்.

பாடசாலைகளில் உயர்தர த்தில் தமிழ் கற்கும் மாணவர்க ளிடையேநடத்தப்பட்ட திருக்குறள் தேர்வு தொடர்பான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. நிறைவு நிகழ்வாக கொட் டகலை ஆசிரிய கலாசாலை யினர் வழங்கும் உவந்துறை வர் உள்ளத்துள்என்றும்என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம் இடம்பெறும். (இ-7)

அதிகாரப்பகிர்வு அரசியலமைப்புக்கு ஒத்துழைக்க அமைச்சர் விஜயதாஸவிடம் சுமந்திரன் கோரிக்கை

(கரணவாய்)

காணி அதிகாரங்கள் குறித்தும் அது எப்படியாக அதிகாரப்பகிர்விலே இடம்பெற வேண்டும் என இடைக்கால அறிக்கை வரைபை தயார் செய்தவர் அமைச்சர். ஆகை யினாலே தொடர்ச்சியாக நாங் கள் இந்த விடயத்தில் ஈடுபடு கிறபோது அவருடைய முக்கி யமான ஈடுபாடு இருக்க வேண் டும் என வடபகுதி மக்கள் சார் பில் உயர்கல்வி கலாசார அமைச்சர் விஜயதாஸ ராஜபக் ஷவிடம் த.தே.கூட்டமைப் பின் யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும் அக் கட்சியின் ஊடகப் பேச்சாள ருமான எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை முன்வைத்தார்.

தென்மராட்சி பிரதேசத் தில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலைய திறப்பு விழா நேற்று முந்தினம் ஞாயிற்று க்கிழமை நடைபெற்ற போது விருந்தினராக கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கை யில்,

குறித்த மொழி பேசுகின்ற மக்களுக்கு அடையாளமாக கலாசார பின்னணி இருக் கும். கலாசாரம் இல்லாத ஒரு இனம் இருக்க முடியாது.

இங்கு இரண்டு கலாசார மண்டபங்கள் இருக்கின்றன. இது இப் பிரதேச செயலக த்தை இரண்டாகப் பிரிப்பதற் கான கலாசார மண்டபமா கவும் இருக்கலாம்.

வெவ்வேறு பிரதேசங்கு ளில் இருக்கிற கலை, கலா சாரங்களை வளர்த்து எல் லாவற்றையும் ஒன்றாகச் சேர் த்து கொண்டாடக் கூடியதான ஒரு சாலகட்டத்தை இந்த நாட்டிலே ஏற்படுத்துவதற்கு இப்போது நாங்கள் விளை ந்து கொண்டிருக்கிறோம்.

வெவ்வேறு மக்கள் வாழ் கின்ற இந்நாட்டிலே வெவ் வேறு மொழிகள் பேசுபவர் கள், வெவ்வேறுசமயங்களை பின்பற்றுபவர்கள் எல்லாவற் றிலும் மேலாக வெவ்வேறு கலாசாரப் பின்னணியில் வாழ்கின்ற மக்கள் அந்த தனித்துவங்களை பேணுகி ன்ற அதற்கு முதலிடம் கொடு ப்பவராக இருந்தாலும் ஒரு வரை ஒருவர் மதித்து சமத் துவமாக இந்த நாட்டிலே சம மாக வாழக்கூடியதான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்ட தான முறையிலே நாங்கள் வாழக் கூடியதாகவும் செய் யக் கூடிய விதத்தில் இந்த அர சாங்கம் பல நடவடிக்கை களை எடுத்து நீண்ட காலத் தின் பின்னர் மீண்டும் புதிய அரசியல் அமைப்பு உருவா க்கப்பணிகள் தொடங்கி இருக் கிறது. அந்த வழிநடத்தல் குழுவில் அமைச்சர் முக் கிய உறுப்பினராகவுள்ளார் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-60)

கலைமன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அமைச்சுக் கள், அமைச்சுக்களின் கீழு ள்ள திணைக்களங்களில்கட மையாற்றும் அரச உத்தியோ கத்தர்கள் மற்றும் பதிவு செய் யப்பட்ட கலைமன்றங்களுக் கிடையில்26.05.2018, 27.05. 2018 ஆகிய திகதிகளில் நடை பெறவிருந்த அரச ஊழியர்க ளின் ஆக்கத்திறன் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளது என்பதுடன் அரசஊழியர்கள்மற்றும்கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன்போட்டிகள்02.06. 2018, 09.06.2018,10.06. 2018 ஆகிய திகதிகளில் அவர் களுக்குரிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் பற்றிய அனைத்துவிபரங்களும்விண் ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படும் என வடமாகாண கல்வி அமைச் சின் உதவிப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி அறிவித்துள்ளார். (இ

வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன்

ஆலய வருடாந்த பொங்கல் விழா

25.05.2018 வெள்ளிக்கிழமை

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

அம்பிகை அடியார்களே!

வன்னிவிளாங்குளம் பகுதியில் பன்நெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் விளம்பி வருஷம் வைகாசித் திங்கள் 11 ஆம் நாள் (25.05.2018) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9.00 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூ மாலைகள் போன்ற வற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எமது சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் தொண்டர்கள் தங்கள் இல்லம் நாடி வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்களால் இயன்றளவு நிதி வழங்கி பொங்கல் விழாவை சிறப்பாக நிறைவு செய்வதோடு அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- 1. பொங்கல் தினத்தன்று விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 23.05.2018 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்- தொடர்புகளுக்கு-077 889 6796

- உணவு கையாள்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ், நீர்ப் பகுப்பாய்வுச் சான்றிதழ், இவ்வாண்டுக்குரிய பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- உணவு கையாள்பவர்கள் ஏப்ரன், தொப்பி என்பன அணிதல் வேண்டும்.
- மூடியுடன் கூடிய கழிவகற்றல் தொட்டி, வெள்ளைத்தாள் பாவனை, உணவு இடுக்கிப் பாவனை போன்ற சுகாதார விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

(C-2655)

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை, வன்னிவிளாங்குளம், மாங்குளம்.

முற்போக்குவாதிகளின் சிந்தனைகள் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டும்

யாழ்.மாநகரசபை உறுப்பினர் செல்வவடிவேல் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக ஓங்கி ஒலித்த முற்போக்கு வாதிகளின் சிந்தனைகள் மறைக்கப்பட்டு இன்று முத லாளித்துவ வர்க்கத்துடன் முற்போக்குவாதிகள் சிலர் சமரசம் செய்யும் நிலை உரு வாகியதால்தான் இன்றும் தொழிலாளர் வர்க்கம் தமது உரிமையை நிலை நிறுத்த தொடர்ந்தும் போராட வேண் டிய நிலை காணப்படுகின் றது என யாழ் மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடி வேல் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி மனைதெற்கு வள கூட்டுறவுச் சங்க சமாச மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற மேதின உரிமையும் உழைப்பாளர் ஐக்கியமும் என்ற முற்போக்கு வாத தலைவர்களின் நினைவு கூரல் நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.மேலும் அவர் தெரிவிக்கையில்,

உலக தொழிலாளர் தினம் என்பது தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தி அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை களுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளும் ஓர் உரிமை சாச னமாகத்தான் இருந்து வரு கின்றது.

ஆனாலும் முற்போக்கு வாதிகளால் செயற்படுத்தப் படும் இந்த உழைப்பாளர் தினம் இன்று முதலாளித் துவ வாதிகளின் பின்னால் சமரசம் செய்யப்பட்டு மதவா தங்களுக்கு பின்னால் எடுபட்டுச் செல்லும் நிலை உருவாகியு ள்ளமை வேதனையா னது.

ஏழைகளின் வலிகளை யும் உழைப்பாளர்களது வேத னைகளையும் தாங்கிய முற் போக்குவாதிகளின் சிந்த னைகள் எமது இளைஞர் மத்தியிலிருந்து மறைக்கப் படுவதால்தான் இன்று எமது இளைய சமூகம் தடம்மாறிச் செல்வதைக்கூட தடுக்க முடி யாது இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையில் இன்று மறக்கப்பட்டுக் கொண் டிருக்கும் முற்போக்குவாதி களை மீண்டும் எமது இளம் சமூகத்தினரிடையேகொண்டு செல்வதற்கான ஒரு சந்தர்ப்ப த்தை இந்த நிக ழ்வின் ஏற்பா ட்டுக் குழு உரு வாக்கித் தந் துள்ளது.

அத்துடன் துன்பத்தை யும் மகிழ்ச்சி யுடன் எதிர்கொள்ளும் முற்போக்குவாதிகளின் சித்தாந தங்களை எல்லாம் இன் றைய சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் ஒரு வழிகாட்டியாக அமைய இந்த நிகழ்வு வழி கோல வேண் டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாக உள் ளது.

அந்தவகையில் திசை மாறிச் செல்லும் எமது இளை ஞர்களை, எமது இனத்தை ஒருதிசை நோக்கி வழிநடத் திச் செல்ல இந்த நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு வழிசமைக் கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 16 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:MSC பொறியியலாளர்
தொ.இ: B/7687

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம் 1ஆம் பாதம்
உயரம்: 6'
தகைமை/தொழில்:LLBசட்டத்தரணி
தொ.இ: B/7688

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L வியாபாரம்
தொ.இ: B/7690

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வாய் பேசமாட்டார், செவிப்புலன் அற்றவர்
தொ.இ: B/7691

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம் 1ஆம் பாதம்
உயரம்: 155cm
தகைமை/தொழில்: பட்டதாரிX RAY எடுத்தல்
தொ.இ: G/7833

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1ஆம்பாதம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7834

பிறப்பு: 1987 கிறிஸ்தவம்(RC)
நட்சத்திரம்: சுவாதி
தகைமை/தொழில்:DIPLOMA ஊடகவியலாளர்
தொ.இ: G/7835

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி4ஆம்பாதம்
கி.பா: 33
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L TO
தொ.இ: G/7839

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் திருச்செல்வம் வீதியில் சகல வசதிகளும்கொண்ட வீடு உடன்வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 670 5196, 077 246 7873 (4143)

பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(பரந்தன்)

நாட்டில் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள விலையேற்றத்தை கண்டித்து கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 10 மணிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் ஒன்றுதிரண்ட பொதுமக்கள், விவசாயிகள், வியாபாரிகள் என பலர் காக்கா கடைச் சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை ஊர்வலமாக பொருட்கள், சேவைகள் மீதான விலையேற்றத்தை கண்டித்து தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர்

ஆர்ப்பாட்டத்தின் போது "பொருட்களின் விலையை ஏற்றாதே, மக்களின் வயிற்றில் அடிக்காதே, அரசியல் தீர்வா விலைவாசி உயர்வா?, அரசே விலையைக் குறை, கூட்டமைப்பெனத்தைக் கலை, அரசியல் தீர்வுக்கு பரிசு விலைவாசி உயர்வா?, உள்ளூர் உற்பத்திக்குச் சந்தையைத் தா, வெளி நாட்டு இறக்குமதிக்கு தடையே போடு, வேலைவாய்ப்பை தா, விலையேற்றத்தை குறை, விவசாயிகள் பாடு திண்டாட்டம், முதலாளிகள் பாடு கொண்டாட்டம், சிறு கடன், தொடர் கடன், பெருங்கடனில் நாங்கள், கூட்டாட்சி நல்லாட்சி கொழுத்த ஆட்சியில் நீங்கள், நெல்லுக்கு நிர்ணய விலை வேண்டும், விவசாயிகள் நிமிர வேண்டும், கடலால் சூழப்பட்ட நாடா இல்லை கடனால் சூழப்பட்ட நாடா?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.

குறித்த பேரணியில் விலைவாசி உயர்வைக் கண்டித்து பாம்பு ஒன்று கொடும் பாவியாக இழுத்துச் செல்லப்பட்டதுடன் போக்கு வரத்து அடையாளமாக மாட்டு வண்டியில் மக்கள் சிலர் பயணித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதேவேளை எரிபொருள் வாயுவின் விலை அதிகரிப்பை கண்டித்து சிலிண்டர்களையும் ஏந்தி சென்ற மக்கள் பல்வேறு கோசங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த சந்திரகுமார் எம்.பி, நல்லாட்சி அரசு என்ற போர்வையில் மக்களின் வாழ்க்கை சுமைக்கு மேலாக விலைவாசி களை அதிகரித்து வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் வேலையின்றி அல்லலுறும் நிலையில் குறித்த விலைவாசிகள் அதிகரித்து செல்கின்றது.

தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என அவர் மேலும் கருத்து தெரிவித்தார். (2-312)

வவுனியாவில் மாடு மேய்க்கச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, சிதம்பரபுரம், கற்குளம் 2 ஐ சேர்ந்த நாகன் கோணமலை (வயது-64) என்பவர் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் கற்குளத்திலுள்ள தனது வீட்டிலிருந்து மாடு மேய்ப்பதற்காக வெளியில் சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததையடுத்து வீட்டார் அருகிலிருந்தவர்களின் உதவியுடன் தேடிச் சென்றுள்ளனர்.

இதன் போது இரவு 8 மணியளவில் குறித்த பகுதியில் பிரஸ்தாப நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

இராணுவத்தின் மின்சார வேலியில் சிக்கிய யானை உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் நீண்ட நாட்களாக மக்களுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்திய காட்டு யானை ஒன்று இராணுவத்தினர் மின்சாரம் பாய்ச்சிய வேலி ஒன்றில் சிக்கி நேற்று உயிரிழந்துள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு குளத்தின் ஒரு கரையாக காணப்படும் தேராவில் பகுதியில் இராணுவத்தால் மின்சாரம் பாய்ச்ச பயன்படுத்திய மின் கம்பியில் மோதுண்ட யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் யானைத் தந்தத்தை எடுத்துச் சென்ற தோடு கிராம அலுவலர் ஊடாக யானையை புதைக்க நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (2-281)

ஒலுமடுவில் ஒருமாத காலத்திற்கு நடமாடும் பொலிஸ் காவலரண்

(பனிக்கன்குளம்)

இலங்கை பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக் கமைவாக பொலிஸ் சேவையை மக்களுக்கு அருகில் சென்று வழங்கி மக்களின் கஷ்டங்களை குறைக்கும் முகமாக நடமாடும் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு ஒருமாத காலத்துக்கு சேவை வழங்கும் முகமாக பொலிஸ் காவலரண்கள் திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கு சேவையாற்றப்படுகிறது

அந்தவகையில் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒலுமடு பகுதியில் நடமாடும் பொலிஸ் காவலரண் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது குறித்த பகுதியில் வாழும் மக்கள் பொலிஸ் நிலையம் சென்று பெறும் சேவைகளை இலகுபடுத்தி அவர்களது கிராமத்தில் வழங்கும் முகமாக இன்றிலிருந்து (நேற்றிலிருந்து) ஒரு மாத காலம் இந்த பொலிஸ் காவலரண் இயங்கவுள்ளது

மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதய புஸ்பகுமார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் வசந்த கந்தேவத்த கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நிகழ்வில் 574 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி கேணல் வர்ணகுலசூர்ய, மாங்குளம் வைத்தியசாலை வைத்தியர், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி, மாங்குளம் மின்சாரசபை பொறியியலாளர், மாங்குளம் மக்கள் வங்கி உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதய புஸ்பகுமார, இந்த ஒருமாத காலப்பகுதியில் மக்களுக்கான பொலிஸ் சேவைகள் அனைத்தையும் வழங்குவதோடு கலாசார நிகழ்வுகள், மாணவர்களுக்கான போக்குவரத்துவிதிகள், தொடர்பான விழிப்புணர்வுகள், வெங்கு ஒழிப்பு, சிரமதானம் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் போது நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களுக்குத்தென்னங் கன்றுகளும் பொலிஸாரால் வழங்கிவைக்கப்பட்டன. (2-281)

மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு தொகுதி மாணவர்களுக்கு புத்தகப்பைகள் கடந்த 19 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெளீட்டு பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் "மரணம் முடிவல்ல" எனும் இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த இறுவெட்டு மூலம் கிடைக்கப் பெற்ற பணத்தினை கொண்டு முள்ளிவாய்க்காய் கிழக்கு பகுதியில் வசிக்கின்ற 57 பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2)

சுரபிநகர் மாதிரிக் கிராமம்

அமைச்சர் சஜித் பிரேமதாஸவினால் இத்தாவிலில் நேற்று திறந்து வைப்பு

(கண்டாவளை)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் செமட்ட செவன வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி இத்தாவில் பகுதியில் சுரபிநகர் மாதிரிக் கிராமம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இத்தாவில் கிராமத்தில் குறித்த திட்டத்தின் கீழ் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு 25 பயனாளிகளுக்கான காணி உரிமங்கள் கையளிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் அமைச்சர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வில் 25 பயனாளிகளுக்கு காணி உரிமங்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 பேருக்கு மூக்கு கண்ணாடிகள், 200 பேருக்கு தொழில் உபகரணங்கள், 800 பேருக்கு 50 ஆயிரம் மற்றும் ஒரு இலட்சம் பெறுமதியான கடன் திட்டத்தின் கீழான காசோலைகள் என்பன கையளிக்கப்பட்டன. (2-315)

பொருட்கள் விலையேற்றத்திற்கு எதிராக வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை

(பனிக்கன்குளம்)

எரிபொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், மக்களைப் பசியில் தள்ளும் அரசுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவும் மக்கள் அதிகாரங்களை நிலை நிறுத்த அனைவரையும் இன, மத பேதமின்றி இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிணையுமாறு சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். (2-250-281)

பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் 12 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள்

வாழ்வின் அன்றாட பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்கோடு 12 குடும்பங்களுக்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரனினால் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

ரவிகரனின் 2018 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினிருந்தே குறித்த கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

மேலும் பொருண்மியத்திற்கு இடர்படும் 12 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு, 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட கால்நடை மருத்துவமனையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. இரத்தினசபாபதி, கால்நடை மருத்துவர் திருமதி. தில்லைநாதன் நிரோதினி, கமநலசேவைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேசுவரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (2)

3ஆயிரத்து 389 மீனவர்களின் கரையோரத்தொழில் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 128 கிலோ மீற்றர் கரையோரப் பகுதிகளில் தொழில்களில் ஈடுபட்டு வரும் மூவாயிரத்து 389 மீனவர்கள் தமது கடல் தொழில்சார் நடவடிக்கைகளில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எழுபது வீதமான மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்ற போதும் மொத்தமாகவுள்ள குடும்பங்களில் நாலாயிரத்து 205 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதில் தற்போது கரைச்சி கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சுமார் 128 கிலோ மீற்றர் கரையோரப் பகுதிகளில் மூவாயிரத்து 389 பேர் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் வெளி மாவட்ட மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் உள்ளிட்ட தொழில்களால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூடுதலான கரையோரப் பகுதிகளில் சீறங்குதுறைகள் இன்மை, உரிய தொழில் உபகரணங்கள் இன்மை காரணமாக தமது தொழில் நடவடிக்கைகளில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்தில் உள்ள நன்னீர் குளங்களின் கீழ் நன்னீர் மீன்பிடிகளில் ஈடுபட்டு வரும் 750 வரையான குடும்பங்களும் தற்போது நிலவும் வரட்சியின் காரணமாக குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

12 கிராமங்களில் புனரமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் செயலிழப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளத்திற்குட்பட்ட 12 கிராமங்களில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழான குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. யுத்த காலத்தில் இவை முழுமையாக சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

மக்கள் மீள்குடியேறியதையடுத்து செயலிழந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்கள் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டநிலையில் அவை கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அதாவது செல்வபுரம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான், விநாயகபுரம், பாலி நகர், கறுப்பிகுளம், புகழேந்தி நகர், பாரதிநகர், திருநகர், வளநகர், கொத்தம்பியாகுளம், ஆகிய பகுதிகளில் 470 விவசாயக்குடும்பங்கள் நன்மையடையக்கூடிய நிலையில் மேற்கொள்ளப்பட்ட 12 ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்களும் இவ்வாறு செயலிழந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-315)

கிளி. மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைகள் இன்றி பண்ணையாளர்கள் பெரும் அவதி

கிளிநொச்சி மாவட்டத்தின் கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தினையும் கால்நடை வளர்ப்பையும் கொண்ட மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளுக்கான நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அவை அத்துமீறிப்பிடிக்கப்பட்டு பயிர்ச் செய்கை நிலங்களாகவும் குடியிருப்பு நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளமையால் மேய்ச்சல் தரவைகள் இல்லாது காணப்படுகின்றன.

இதனால் பயிர்ச்செய்கை காலங்களில் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வேறு இடங்களிற்கு கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. அவ்வாறு கொண்டு செல்வதனால் அவ்வப் பிரதேசங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது 33 ஆயிரம் வரையான மாடுகள், ஆயிரம் வரையான எருமை மாடுகள், எண்ணாயிரம் வரையான ஆடுகள் வன்னியாகவும் உள்ளதாகவும் இவற்றின் தொகைக்கேற்ப மேய்ச்சல் தரவை ஒன்றை உருவாக்குமாறு பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

வடக்கு மாகாணத்தில் ஒரு பண்பாட்டுப் பல்கலைக்கழகம்

வடக்கு மாகாண சபையில் மாகாண சபை உறுப்பினர் தம்பு இரத்தினலிங்கம் ஜெயசேகரத்தால் வடமாகாணத்தில் வடமாகாண சபையால் ஒரு பண்பாட்டுப் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்று ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டு அது சபையால் நிறை வேற்றப்பட்டு இருப்பது எமக்கு மகிழ்வைத் தருகின்றது. இது ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பமாகும். இச்செயற்பாடு ஏனைய மாகாண சபைகளில் செயற் பாடுகளிலும் முன்னோடியான செயற்பாடாகவும் இச்செயற்பாடு வடக்கு மாகாண சபைக்கு கௌரவத்தையும் கொடுத்துள்ளது.

இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரமே மாகாணசபை கட்டமைப்பு இந்நாட்டில் உருவாக்கப்பட்டது. இத் திருத்தத்தின் பிரகாரம் நாட்டின் அதிகாரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது மத்திய அரசு மாத்திரமே மேற் கொள்ளும் விடயங்கள், இரண்டாவது மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள், மூன்றாவது மத்திய அரசும் மாகாண சபையும் இணைந்து (Con current list) மேற்கொள்ளக் கூடிய விடயங்கள்.

மத்திய அரசு-மாகாண சபை இணைந்து மேற் கொள்ளக் கூடிய விடயப் பரப்புகளில் உயர்கல்வியும் அடங்கும். பிரிவு 4.1 இல் இருபகுதியினர் இணைந்து புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கவும் பிரிவு 4.2 இல் 1987 ஆம் ஆண்டு 7 ஆம் சட்டப்படி பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களை நிறுவவும் மற்றும் மூன்றாம் நிலை தொழில்நுட்ப நிறுவனங்களை அமைக்கவும் மேலும் பாடசாலைக் கல்வி பின் னைய கல்வி பயிற்சி நிறுவனங்களை அமைக்க வழி செய்யப்பட்டுள்ளன. இதனால் மாகாணசபைகள் மத்திய அரசாங்கத்துடன் இணைந்தும் அல்லது அனுமதி பெற்று தனியாகவே புதிய பல்கலைக்கழகங்களை அமைக்க முடியும். சட்டத்தில் இதற்கு இடமுண்டு. இலங்கையில் இதுவரை எந்த மாகாண சபையும் இம்முயற்சியில் ஈடுபடவில்லை. வடக்கு மாகாணத்திற்கு வெளியில் இருக்கும் மாகாணங்களுக்கு இது தேவையில்லாமல் இருக்கலாம். மறுபுறம் இம் மாகாணங்களில் வாழும் சிறு பான்மையினர் விருப்பமும் அவர்களால் இத்திட்டத்தை முன்னெடுக்க முடியாதுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் போராட்டத்தின் காரணமாகவே நாட்டில் மாகாண சபைக் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட போதும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசியல் காரணங்களுக்காக மாகாண சபை முறையை சமச்சீர் அதிகாரப் பரவு அடிப்படையில் நாடு முழுவதற்கும் ஏற்படுத்தினார். மாகாணசபை முறையில் வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் மற்றைய ஏழு மாகாண சபை செயற்பாடுகளிலும் வேறுபட்டனவாக இருக்கும், இருக்கவும் வேண்டும்.

இலங்கையில் இன்று பல்வேறு வகையான பல்கலைக்கழகங்களும் உயர் பட்டங்கள் வழங்கும் நிறுவனங்கள் இருந்த பொழுதும் நாட்டில் சிங்களமொழி, பௌத்த மதம், சிங்களப் பண்பாடு, கலை, இலக்கிய, நாட்டார் கலைகள் கற்க, ஆய்வு செய்ய, ஆற்றுகை செய்ய இருக்கும் வாய்ப்பு, வசதிகள் தமிழ்மொழிக்கோ இந்து மதத்திற்கோ தமிழ் பண்பாடு, கலை, இலக்கியம் மற்றும் நாட்டார் கலைகளுக்கு குறைவென்ற நிலையே காணப்படுகின்றது. சிங்களப் பண்பாட்டை பல்வேறு உயர்நிலையில் கற்க, ஆய்வு செய்ய, ஆற்றுகைப்படுத்த தனியான பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

கொழும்பில் இருக்கும் காண்பியமும் ஆற்றுகைக் கலைப் பல்கலைக்கழகம் (University of visual and performing arts) நான்கு பீடங்களை- நடனமும் நாடகமும், சங்கீதம், கட்புலக் கலைகள் மேலும் உயர் கற்கைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இதற்குள் நடனமும் நாடகமும் பீடத்தில் கண்டிய நடனத்துறை, கரையோர நடனத்துறை, சப்ரகமுவ நடனத்துறை, அறங்கு, மேலை மற்றும் நவீன நடனத்துறை, இந்திய ஆசிய நடனத்துறை, இசைக்கருவிகள் சங்கீதத்துறை மற்றும் நடனம் நாடக வரலாற்று கோட்பாட்டுத்துறை உள்ளன. சங்கீத பீடத்திற்குள் இந்திய சங்கீதத்துறை, சங்கீத இயல் துறை, பிரயோக சங்கீத மற்றும் வெகுஜன தொடர் பாடல் துறை , இனம்சார் சங்கீதவியல்துறை (Dept of ethno musicology), வட இந்திய பாரம்பரிய சங்கீதத் துறை, மேற்கத்தேய சங்கீதத்துறை என ஆறு துறைகளைக் கொண்டுள்ளன.

கட்புல கலைப்பீடத்தில் ஓவியத்துறை, சிற்பத்துறை, கட்புல தொடர்பாடல்துறை, பல்துறை வடிவமைப்புத் துறை, நெசவும் அணியும் ஆடை வடிவமைப்புத்துறை, மட்பாண்டத் தொழில்துறை, அச்சு தயாரிக்கும் துறை, கலை வரலாறும் கோட்பாட்டுத்துறை, பல்துறை ஊடகக் கலைத்துறை ஆகிய கொண்டு 9 துறைகளைக் கொண்ட பீடமாக இருக்கின்றது. இப் பல்கலைக்கழகத்தை இராமநாதன் அக்கடமி, விபுலானந்தர் அக்கடமியுடன் ஒப்பிட முடியுமா?

ஹோமாகமவில் இருக்கும் பாளி பௌத்த பல்கலைக்கழகம், அநுராதபுரத்தில் இருக்கும் பௌத்த துறவிகள் கற்கும் (Buddhist sarawak University) மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் படிப்பு நிறுவனம் மேலும் கண்டியில் இருக்கும் பட்டங்கள் வழங்கும் அதிகாரத்தைக் கொண்ட சர்வதேச பௌத்த மத்திய நிலையம்.

இஸ்லாத்திற்கு தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அராபி-இஸ்லாமிய பீடம் ஒன்று இருக்கின்றது. இதைத் தவிர, தனியார் துறை பேருவளையில் நஜீம் ஹாஜியார் இஸ்லாமிய உயர் கல்வி நிறுவனம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரிதிதென்னயில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கத்தோலிக்க மக்களுக்கு அக்குவனஸ் உயர்கல்வி நிறுவனம் பட்டங்கள் வழங்கும் சுயாட்சி தனியார் நிறுவனமாக இருந்தாலும் இங்கு தமிழ் கத்தோலிக்க கலை, பண்பாடு, சடங்குகள், திருவிழாக்கள், இலக்கியம், நாட்டியம், கூத்து போன்றனவுக்கு போதிய இடம் இல்லை.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ், சமயம், சங்கீதம், பரதநாட்டியம், நாடகமும் அரங்கியலும் நுண்கலை ஆகியன கற்பிக்கப்படுகின்ற பொழுதும் தமிழ்மக்களின் பண்பாட்டுத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும் மானிய ஆணைக்குழுவின் கீழ் இருக்கும் பல்கலைக்கழகங்கள் இன்று தேசிய பல்கலைக் கழகங்களாகவும் இங்கு சகல இன மக்களும் கற்கும் இடங்களாகவும் மாறிவருவதுடன் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், முக்கியத்துவம் பெற்று வருவதால் கலை, பண்பாட்டுத் துறைகள் கவனயீர்ப்பை இழந்து வருகின்றன. இப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி பண்பாட்டுக் கற்கைகளை முன்னெடுப்பதிலும் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன.

வட பகுதி மக்களின் மொழி, சமயம், சங்கீதம், நடனம், நாட்டியம், நாட்டார் கலைகளின் போன்றவற்றை வளர்க்க, மேம்படுத்த இலங்கையில் இன்றுள்ள பல்கலைக்கழக கட்டமைப்பில் சுதந்திரமாக, முழுமையாக, மனநிறைவாக முன்னெடுக்க முடியாது. இலங்கையில் தமிழர் பூர்வீக குடிகள். இலங்கையில் வட மாகாணம் வரலாறு, மொழி, சமயம், பண்பாடு, நாட்டார் கலைகளில் ஏனைய பகுதிகளிலும் வேறுபட்டு இருக்கின்றது. வடபகுதி மக்கள் பேசும் தமிழ் மிகவும் உயர் தரம் கொண்டதுடன் மொழி, கலப்பற்றதாகவும் இருக்கும் சிறப்புப் பெற்றது. தமிழுக்கு இன்று செம்மொழி அந்தஸ்து (Classical language status) கிடைத்துள்ளது. "யாழ்ப்பாணத் தமிழ்" தூய தமிழ் எனத் சர்வதேச தமிழ் அறிஞர்களால் விதந்துரைக்கப்படுகின்றது. இந்நிலையில் தமிழ்மொழியை வளர்க்கும் பொறுப்பும் எமக்குண்டு. தமிழ்நாடு ஆங்கில மொழி மோகத்தால் தூய தமிழை அழிக்கின்றார்கள். இதனால் எமது அமையவிருக்கும் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் செம்மொழியை விருத்தி செய்வதில் முக்கிய பங்கை வகிக்க முடியும். வடக்கு மாகாணத்தில் இந்துக்களும் தமிழ் கத்தோலிக்கருமே மிகக் கூடுதலாக வாழ்கின்றார்கள். இந்துக்கள் தங்கள் சமயக் கல்வி, கலாசாரங்களை மேம்படுத்த உயர்கல்வி வாய்ப்புக்கள் மிகக் குறைவு. யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக் கழகங்களில் இக்கற்கை நெறிக்கு ஒரு துறையே இருக்கின்றதே அல்லாமல் ஒரு பீடமோ பல்கலைக்கழகமோ அன்றி உயர்கல்வி நிறுவனமோ இல்லை. இது போல தமிழ் கத்தோலிக்கரின் சமயக் கல்விக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு துறை இருக்கின்றது. அக்குவனஸ் உயர்கல்வி நிறுவனம் இருப்பினும் அங்கு தமிழ் கத்தோலிக்க கற்கை வசதிகள் இல்லை எனலாம். இதனால் வடக்கு மாகாண பண்பாட்டு பல்கலைக்கழகம், இந்து கத்தோலிக்க பண்பாட்டை வளர்க்க, மேம்படுத்த பங்களிப்புச் செய்யலாம். மேலும் இம் மாகாணத்தில் வாழும் இஸ்லாம், பௌத்த சமய குறிப்பாக தமிழ் பௌத்த பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவ முடியும்.

வடக்கு மாகாணத்தில் பரதநாட்டியம், தவில்-நாதஸ்வர இசை, இப் பிரதேசத்திற்குரிய நாடகமும் அரங்கக் கலைகளும் கூத்துக்களும் மற்றும் சித்திரமும் வடிவமைப்புகளும் நாட்டார் கலைகளும் சிறப்பாக இப் பண்பாட்டுப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்க முடியும்.

உலகில் பல நாடுகளில் குறிப்பாக அதிகாரப் பரவல் கொண்ட நாடுகளில் மத்திய அரசு பல்கலைக்கழகங்கள், மாநில அரசு பல்கலைக்கழகங்கள், உள்ளூராட்சி மன்றப் பல்கலைக்கழகங்கள் என இருக்கின்றன. இதற்கு இந்தியா, ஜப்பான், சுவிஸ் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இந்தியாவில், தமிழ் நாட்டை எடுத்து நோக்கினால் இது ஒரு மாநிலமாக இருந்தும் மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களான IIT Madras, NIM Thiruchi, திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் நாட்டுக்குரிய பல துறைசார் (Thematic Universities) பல்கலைக்கழகங்களும் இவைகளுடன் இணைந்த அரச மற்றும் தனியார் கல்லூரிகளும் இருக்கின்றன. மத்திய அரசும் தமிழ் நாடும் இணைந்த சமுத்திரப் பல் கலைக்கழகம் சென்னையில் இயங்குகின்றது.

சுவிட்ஸர்லாந்தில் மத்திய

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

பல்கலைக்கழகங்களும் (Central Universities) கன்டோன் பல்கலைக்கழகங்களும் (Canton Universities) இருக்கின்றன.

ஜப்பானில் மத்திய பல்கலைக்கழகங்களும் உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தும் Perfecture Universities இருக்கின்றன.

இலங்கையிலும் கூட UGCயின் கீழ் 17 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. சமுத்திர பல்கலைக்கழகம் மீன்பிடி அமைச்சின் கீழும் பாளி பௌத்த பல்கலைக்கழகம் பௌத்த சாசன அமைச்சாலும் நடத்தப்படுகின்றன. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்தாலும் கற்கும் சிவில் மாணவர்களிடம் இருந்து பணம் பெறப்படுகின்றது. தேசிய கல்வி நிறுவனம் NIE கல்வியில் பட்டங்கள் வழங்கும் நிறுவனமாகும். இதுபோல பல பட்டங்கள் வழங்கும் நிறுவனங்கள் அரச துறையிலும் தனியார் துறையிலும் இயங்குகின்றன. பல்வேறு வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டத்துக்கு கற்பிக்கும் நிறுவனங்களும் இங்குண்டு. இங்கு உதாரணங்கள் குறிப்பிடப்பட்டதேயல்லாமல் முழு விபரங்கள் தரப்படவில்லை.

வடக்கு மாகாண சபை முன்னெடுத்துள்ள பண்பாட்டு பல்கலைக் கழகத்திட்டம் மிகவும் முற்போக்கான காலத்துக்குரியது. சமூக நலன் நோக்கிய திட்டமாகும். இப் பல்கலைக்கழகம் நிறை வேறுமாக இருந்தால் வட பகுதி மக்களது பண்பாட்டை மேன்மை அடையச் செய்ய முடியும். வட இலங்கைச் சங்கீத சபை, ஆரிய பாசா திராவிட சங்கம் முன்னெடுத்த பணிகள் மற்றும் பலர் பேற் கொண்ட கலை, இலக்கிய மேம்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து விருத்தி செய்ய முடியும்.

இத் திட்டத்தை முன்னெடுக்க மாகாண சபைக்கு ஆளுநரும் இம்மாகாண பாராளுமன்ற அங்கத்தவர்களும் கைகொடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் இம் மாகாணத்தில் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் அமைவதை மனப்பூர்வமாக அங்கீகரித்து உதவிகளைச் செய்வது வட பகுதி மக்களுக்கு ஆற்றும் கடமையாகும்.

இராணுவத்தினர் நினைவாக விளக்கேற்றும் பூஜை

(கொழும்பு)

நாட்டுக்காக உயர்நீத்த இராணுவத்தினரை நினைவு கூர்ந்து விசேட விளக்கேற்றும் பூஜையொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் களனி ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இதன்போது . கடந்த 30 ஆண்டுகளாக இந்நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரை நினைவு கூரும் முகமாக 29 ஆயிரத்து 142 விளக்குகள் ஏற்றப்பட்டன. (இ-7)

வைரஸ் தொற்றுக்கு சிகிச்சையளிக்க அனைத்து வசதிகளையும் வழங்கவும்

சுகாதார அமைச்சர் ராஜித பணிப்பு

(கொழும்பு)

தென்மாகாணத்தில் பரவி வரும் ஒருவகை வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குமாறு சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜயசிங்கவைப் பணித்துள்ளார்.

இதன்படி, 10 ஹைஃப்ளோ ஒட்சிசன் இயந்திரங்கள் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வைத்தியர்கள் கோரும் அனைத்து வசதிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

காலி கராப்பிட்டிய, மாத்தறை எல்பிட்டிய, கம்புறுப்பிட்டிய, தங்காலை வலஸ்முல்ல ஆகிய வைத்தியசாலைகளில் சுமார் 600 பேர் இந்த நோய்க்கான சிகிச்சையைப் பெற்று வருகின்றனர்.

இந்த நோய்த் தொற்றுக்குள்ளாகி 15 பேர் உயிரிழந்துள்ளனர். இன்புளுவென்சா வைரஸ் காரணமாகவே குறித்த நோய் பரவி வருவதாக தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

அரசாங்கத்திற்குள் மாற்றம் மகிந்தவுடன் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை விட்டு விலகவுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஏற்கனவே அரசாங்கத்திலிருந்து விலகிய 16 உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இவ்வாரம் சந்திக்கவுள்ளதாகவும் இரு அணிகளுக்கு இடையில் இணக்கப்பாட்டின் பிரகாரம் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்ட சில உறுப்பினர்கள் எதிர்வரும் காலத்தில் அரசாங்கத்திலிருந்து விலகுவார்கள் என்றும், அவர்களையும் இணைத்துக்கொண்டு செயற்படவுள்ளதாகவும் தயாசிறி கூறியுள்ளார்.

பிரதமர் ரணிலுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தது தொடர்பாக ஏற்பட்ட குழப்பநிலைகளைத் தொடர்ந்து, சுதந்திரக் கட்சியின் 6 அமைச்சர்கள் உள்ளிட்ட 16 பேர் அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளனர். இவர்கள், கடந்த நாடாளுமன்ற அமர்வில் எதிரணியில் அமர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையில் கரவெட்டி பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் விளையாட்டு மற்றும் உடல்நல மேம்பாட்டு தேசிய வாரத்தின் முதல்நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தயாரூபன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்: மகாலிங்கம்)

எமது மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற தயாராக இல்லை

இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

(கரணவாய்)

வடக்கு-கிழக்கை இந்த அரசாங்கம் அபிவிருத்தி செய்கிறது என்பதை ஏற்கமுடியாது. எமது மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற தயாராக இல்லை எனவும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலைய திறப்பு விழா நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற போது விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால அரசாங்கத்தால் எமது கலை,கலாசாரம் அழிக்கப்பட்டது. ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன. இராணுவமயப்படுத்தப்பட்டு இராணுவ முண்டபங்கள் அமைக்கப்பட்டன. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் இது தொடர்ந்தது. நல்லாட்சி அரசாங்கம் அதை தடுத்து நிறுத்தியது.

கடந்த ஆட்சிக்காலத்தில் விடுவிக்கப்படாமல் இருந்த 5000 ஏக்கர் காணிகளை நல்லாட்சி அரசாங்கம் விடுவித்தது. எமது வட பகுதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கல்வியில் முன்னின்ற நாம் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் பின்னுக்கு நிற்கின்றோம்.

2016 இன் பின்னர் முன்னோக்கி செல்கிறோம். இதற்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம். முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலை காணப்பட்டது. அதற்கு அனுமதியளித்த நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயக நாடு

என்பதை காண்பித்தது.

மாவீரர்கள், முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை அஞ்சலி செலுத்த முடியாது. ஆலயத்தில் மணி அடிக்க முடியாது, பொங்கல் பொங்க முடியாது என்ற நிலைமைகளை மாற்றி அமைத்தோம்.

சிறுபான்மையினரின் வாக்குகளாலேயே இந்த அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியது. பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல் என்பன வரவுள்ளன.

எனவே நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தீர்விற்காக நாங்கள் வாக்களித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

ஏக்கம், உறவு உள்ளவர்கள் நினைவையாவது ஏந்துவார்கள்

கமல்ஹாசன் சுட்டிக்காட்டு

(சென்னை)

"ஏக்கம், உறவு உள்ளவர்கள் நினைவையாவது ஏந்துவார்கள்" என மக்கள் நீதி மய்யத்தின் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக நினைவேந்தல் நிகழ்வை சென்னை மெரினா கடற்கரையில் நடத்துவதற்கு சில பொது அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், தமிழக உளவுப் பிரிவு பொலிஸ் ஆணையர் ஏ.கே.விஸ்வநாதன் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

"நினைவேந்தல் நிகழ்வினை பெரும்பாலான அமைப்

பினர் அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் உள்ளரங்குகளிலும் நடத்திய போதும் சில அமைப்புகள், பொதுமக்கள் கூடும் மெரினாவில் கூடுவதாக அறிவித்துள்ளன. எனவே, யாரும் போராட்டம் என்ற பெயரில் மெரினாவில் தடையை மீறி கூடி பொது மக்களுக்கு இடையூறு செய்ய வேண்டாம். மீறிப் போராட்டம், ஆர்ப்பாட்டம், நினைவேந்தல் என்ற பெயரில் ஒன்றுகூடும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து சென்னை விமான நிலையத்தில் கமல்ஹாசனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அவர், "அது பொலிஸாரின் எச்சரிக்கை. ஏக்கம், உறவு உள்ளவர்கள் நினைவையாவது ஏந்துவார்கள்" எனத் தெரிவித்தார். (இ-7)

மூன்று நாட்களுக்கு முன் காணாமல் போன சிவில் பாதுகாப்பு படைவீரரின் சடலம் மீட்பு

(திருமலை)

திருகோணமலை - சேருநுவர, மாங்கலவெவ புலக் சீய பகுதியில் சிவில் பாதுகாப்பு படை வீரரொருவரின் சடலமொன்று நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

சேருநுவர, காவன்திஸ்ஸபுர பகுதியை சேர்ந்த மாரசிங்க ஆராச்சிலாகே திலகரட்ன (வயது-59) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி மங்கலவெவவிற்கு மீன் பிடிப்பதற்காக சென்ற குறித்த சிவில் பாதுகாப்பு படை வீரர் அதன் பின் வீடு திரும்பாததால் தேடப்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் சடலமாக புலொக் சீய பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.(இ-7)

புலம்பெயர் தமிழ் இளைஞன் லண்டனில் வெட்டிக்கொலை

(லண்டன்)

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் பிரித்தானியாவின், தென்மேற்கு லண்டனிலுள்ள, மிச்சம் பகுதியில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் மிச்சம் பகுதியில் உள்ள வீதியில் அருணேஸ் தங்கராஜா என்ற 28 வயதுடைய இளைஞன் வெட்டுக்காயங்

களுடன் கிடந்தார். அவரை மீட்டு உயிரைக் காப்பாற்ற பொலிஸார் முயற்சித்த போதும், அந்த இடத்திலேயே அவர் மரணமானார். ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார், இந்தக் கொலை தொடர்பான தடயவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கொலை தொடர்பாக 44 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தெற்கு லண்டனிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

பாரதம்

ராஜீவ்காந்தியின் 27 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு

(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 27 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காங்கிரஸ் தலைவர்களும், பொதுமக்களும் டில்லியில் உள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராஜீவ்காந்தி இந்தியாவில் மிகச்சிறிய வயதில் பிரதமர் ஆன முதல் தலைவர் ஆவார். இவர் ஸ்ரீபெரும்புதூரில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, தற்கொலைப் படை தாக்குதலில் கொல்லப்பட்டார். ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டு இன்றுடன் 27 வருடங்கள் நிறைவடைகின்றன.

இந்நிலையில், ராஜீவ் காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் டில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் காங்கிரசின் மூத்த தலைவர்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி, சகோதரி பிரியங்கா காந்தி மற்றும் அவரது கணவர் ராபர்ட் வத்ரா ஆகியோர் டில்லியில் உள்ள நினைவிடத்தில் ராஜீவ்காந்திக்கு அஞ்சலி செலுத்தினர். முன்னதாக, காங்கிரசின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

மேலும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான, மல்லிகார்ஜுன் கார்கே, சுஷில் குமார் ஷிண்டே ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

காங்கிரஸ் தலைவர்கள் மட்டுமல்லாது பொதுமக்களும், தொண்டர்களும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். (7)



2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற யுத்
பிரித்தானியாவில் நினைவேந்தல் நிகழ்வுகள் அண்மையில்

கேரளாவை அச்சுறுத்தும் நிபா வைரஸ் இரு வாரங்களில் 15 பேர் உயிரிழப்பு

(கோழிக்கோடு)

கேரள மாநிலத்தை அச்சுறுத்தி வரும் நிபா வைரஸ் காய்ச்சலுக்கு கடந்த இரண்டு வாரங்களில் 15 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

கேரள மாநிலத்தில் கடந்த சில தினங்களாக அரிய வகை நிபா வைரஸ் பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் இந்த வைரஸ் தாக்குதல் கோழிக்கோடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் பரவலாக உள்ளதால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

இந்த வைரஸ் தாக்குதலுக்கு கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் ஒரு செவிலியர் உள்ளிட்ட 15 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வௌவால்களால் பரவும் இந்த நிபா வைரஸ், மனிதர்கள் மற்றும் விலங்குகளை தாக்குவதாகவும், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான மூளைக்காய்ச்சல் மற்றும் மூளைச்சாவு ஏற்படும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நிபா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளான நோயாளிகளின் ரத்த மாதிரி புனேயில் உள்ள பரிசோதனை மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வைரஸ்தாக்குதல் உறுதி செய்யப்படுகின்றன. (7)

நக்சலைட்டுகள் நடத்திய குண்டுத் ஆறு பாதுகாப்புப் படைய

(சத்தீஸ்கர்)

சத்தீஸ்கர் மாநிலத்தின் தாண்டேவாடா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய குண்டுத் தாக்குதலில் 6 பாதுகாப்பு படையினர் உயிரிழந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலம் தாண்டேவாடா பகுதியின் சோல்னார் கிராமத்தில் பாதுகாப்புப் படை வீரர்கள் பொலிஸ் வாகனத்தில் சென்று கொண்டிருந்த வேளை அங்கு பதுக்கி வைத்திருந்த வெடிகுண்டுகளை நக்சலைட்டுகள் வெடிக்கச் செய்தனர். இந்த குண்டுத் தாக்குதலில் 6 பாது

காவிரி தீர்ப்பு அம்மாவிற்கே சமர்ப்பணம் தமிழக முதல்வர் எடப்பாடி பெருமிதம்

(மதுரை)

கடந்த 32 வருட காலமாக நீடித்த காவிரி நீர் பிரச்சினைக்கு, அ.தி.மு.க அரசு உரிய பதிலை பெற்று கொடுத்துள்ளதாகவும், இது முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சியின் விளைவாக கிடைத்ததென்றும் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடக வியலாளர்களை சந்தித்து கருத்துரைத்த அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

மேல் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் காவிரி மேலாண்மை வாரிய ஆணையத்திற்கு அனைத்து உரிமையும் உள்ளது என்றும், தீர்ப்பின் அடிப்படையில் மத்தியரசு செயற்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் எடப்பாடி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் மேல் நீதிமன்றம் காவிரி விடயத்தில் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு என்றும், இது அ.தி.மு.க. அரசு தமிழக மக்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ள தீர்ப்பு என்றும் முதல்வர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

தென்கொரிய ஜனாதிபதியு தொலைபேசியில் கலந்து

(சியோல்)

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் தொலைபேசியில் அழைத்துப் பேசினார்.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே சிங்கப்பூரில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் சந்தித்து பேசுவதாக அறிவிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இதற்கு இடையே தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னை ஒரு முறையும், சீன ஜனாதிபதி ஜின் பிங்கை இரு முறையும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சந்தித்து பேசினார். ட்ரம்புடனான சந்திப்பு குறித்து அவர் இணக்கமான கருத்துக்களையே வெளியிட்டுவந்தார்.

ஆனால் திடீரென வட கொரியாவின் போக்கில் மாறுதல் தென்படுகிறது. ஒருதலைப்பட்சமாக தன்னை அணு ஆயுதங்களை கைவிடுமாறு அமெரிக்கா நிர்ப்பந்திப்பதாக வட கொரியா கருதுகிறது.

அதுமட்டுமன்றி ட்ரம்புடனான பேச்சுவார்த்தையை இரத்து செய்யவும் தயங்கப்போவது இல்லை என்கிற ரீதியில் அந்த நாடு கருத்து தெரிவித்துள்ளது.

ட்ரம்பும் தன் பங்குக்கு, கிம் ஜாங் உன் அணு ஆயுதங்களை கைவிட்டால், அவர் ஆட்சி அதிகாரத்தில் தொடர்வார். ஆனால் அவர் அமெரிக்காவுடன் அதற்காக ஒப்பந்தம்

குடியிருப்புக்குள் புகுந்த ட்ரக்; 11 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் மத்திய ஜாவா பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த ட்ரக் விபத்தில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தோனேசியா நாட்டின் மத்திய ஜாவா மாகாணத்துக்கு உட்பட்ட ப்ரிபெஸ் மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதியில் சர்க்கரையை ஏற்றிக் கொண்டு ட்ரக் ஒன்று ஜகார்த்தா நகரை நோக்கி சென்று கொண்டிருந்தது.

மலையில் இருந்து இறங்கிக் கொண்டிருந்த அந்த ட்ரக்கின் பிரேக்கில் திடீரென கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதனால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதி அருகில் இருந்த குடியிருப்பு பகுதிக்குள் புகுந்தது. இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் ஒரு கார், 13 இருசக்கர வாகனங்கள் மற்றும் 7 வீடுகள் இந்த விபத்தில் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் மேற்கு ஜாவா பகுதியில் நிகழ்ந்த இதுபோன்ற விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

வெளிநாடு

டபெற்ற யுத்தத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட தாயக உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ண்மையில் நடைபெற்றன. (7-250)

ண்டுத்தாக்குதலில் டையினர் பலி

காப்புப் படை வீரர்கள் உடல்சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 2 வீரர்கள் படுகாயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையை குறித்த பகுதியில் மேற்கொண்டு வருகின்றனர். (7)

தியுடன் ட்ரம்ப் ந்துரையாடல்

செய்துகொள்ளாவிடில் வடகொரியா அழிவை சந்திக்க வேண்டி வரும் என்றார். இந்த நிலையிலீ தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம்தொலைபேசியில்அழைத்துப் பேசினார்.

அப்போது அவர் சிங்கப்பூரில் நடக்க உள்ள பேச்சுவார்த்தையை ரத்து செய்யப்போவதாக வடகொரியா விடுத்த மிரட்டல் பற்றி முக்கிய ஆலோசனை நடத்தினார். இது பற்றி தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன்னின் அலுவலகம் ஒரு அறிக்கை வெளியிட்டது.

அதில், "சமீப காலமாக வட கொரியா எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி ட்ரம்பும், மூன் ஜே இன்னும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர்" என கூறப்பட்டு உள்ளது. (7)

2016 தேர்தல் பிரசார ஊடுருவல் தொடர்பில் நீதித்துறை விசாரணை செய்ய வேண்டும்

அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் கோரிக்கை

(வோஷிங்டன்)

2016 ஆம் ஆண்டு அமெரிக்க தேர்தல் பிரசாரங்கள், புலனாய்வாளர்களினால் கண்காணிக்கப்பட்டதா என்பது தொடர்பாக அமெரிக்க நீதித்துறை விசாரணை கோரவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைக்கு உத்தரவிட்டதா என்பது தொடர்பாக தான் தெரிந்துகொள்ள விரும்புவதாக ட்ரம்ப், தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, அரசியல் நோக்கங்களுக்கு புலனாய்வு பிரிவினர் அமெரிக்க தேர்தல் பிரசாரத்தை கண்காணித்தனரா? அவ்வாறு செய்வதற்குமுன்னைய ஆட்சியாளரான ஒபாமா நிர்வாகத்தினர் உத்தரவிட்டனரா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக இன்று ஆரம்பிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், ஏதேனும் ஊடுருவல்கள் கண்டுபிடிக்கப்படின் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க பிரதி சட்டமா அதிபர் ரொட் ரோசன்ஸ்டீன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்தில் யாரேனும் அரசியல் நோக்கத்திற்காக ஊடுருவல் அல்லது கண்காணிப்பில் ஈடுபட்டால், அது குறித்து தெளிவடைய வேண்டியதுடன், அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (7)

சர்வாதிகாரி ஹிட்லர் மரணம்; தற்கொலை என்பது உறுதியானது

பல் ஆராய்ச்சி மூலம் தகவல்

(பாரீஸ்)

இரண்டாம் உலகப் போருக்கு மூலகாரணமான சர்வாதிகாரி ஹிட்லர் 1945ஆம் ஆண்டு பதுங்கு குழியில் தற்கொலை செய்து கொண்டது தற்போதைய ஆராய்ச்சி மூலம் உறுதியாகி யுள்ளது.

ஜெர்மனியை சேர்ந்த சர்வாதிகாரி ஹிட்லர் பெர்லினில் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பதுங்கு குழியில் தனது காதலி ஈவா பிரயுனுடன் அவர் இறந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் தற்கொலை செய்யவில்லை. நீர்மூழ்கி கப்பல் மூலம் ஆர்ஜென்டினாவுக்கு தப்பிச் சென்றார்.

அண்டார்டிகா அல்லது வேறு பகுதிக்கு சென்று தலைமறைவாகி விட்டார் என்ற சர்ச்சையும் உள்ளது.

அவரது மரணம் குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பிராவ்தா சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பேராசிரியர் சார்லியர் மற்றும் 4 நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

ஹிட்லர் தற்கொலை செய்து கொண்ட பதுங்கு குழியில் இருந்து எடுக்கப்பட்ட மண்டை ஓட்டில் இருந்த பல் மூலம் ஆய்வு நடத்தப்பட்டது. அதில், இடது புறத்தில் துப்பாக்கி குண்டு துளைத்த அடையாளம் உள்ளது.

எனவே, ஹிட்லர் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி பெர்லினில்தான் மரணம் அடைந்துள்ளார் என உறுதியாக கூறியுள்ளனர்.

மேலும் அவர் சைவப் பிரியர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல் அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. (7)

முடிவுக்கு வந்தது வர்த்தகப்போர்

அமெரிக்கா அதிக பொருட்களை இறக்குமதி செய்யலாம்

சீனா ஒப்புதல்

(வோஷிங்டன்)

இரு நாடுகளுக்கு இடையே வர்த்தக தகராறு இருந்து வந்த நிலையில், பல தரப்பு பேச்சுவார்த்தைக்கு பின்னர் அமெரிக்காவிடமிருந்து அதிகளவிலான பொருட்களை இறக்குமதி செய்ய சீனா முடிவு செய்துள்ளது. அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் காப்புரிமையை தவறான முறையில் பயன்படுத்தி அதே பொருட்களை சீனாவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதால் அமெரிக்க நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீனாவின் மீது குற்றம் சாட்டியிருந்தார்.

இதன் நீட்சியாக கடந்த சில மாதங்களுக்கு முன் இரண்டு நாடுகளுக்கும் வர்த்தக தகராறு தொடங்கியது.

இதன் காரணமாக, சீனாவில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் அலுமினியம் உள்ளிட்ட பொருட்களின் மீது பல்வேறு வரிகளை விதித்து ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இதற்கு பதிலடி தரும் விதமாக அமெரிக்காவில் இருந்து சீனாவிற்கு இறக்குமதி செய்யப்படும் 128 அமெரிக்க பொருட்களின் மீது அதிக வரிகளை அந்நாடு விதித்தது. இதையடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகப்போர் மூலம் அபாயம் ஏற்பட்டது.

இந்நிலையில், இரண்டு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகப்போரை தவிர்க்கும் நோக்கில் வோஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான வரி விதிப்பை குறைத்துக் கொள்வதாக அமெரிக்கா தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, அதிகரித்துவரும் சீன நுகர்வோர்களின் தேவைகள் மற்றும் அதை ஈடு செய்ய தேவைப்படும் உயர்தர

பொருளாதார மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு அமெரிக்காவிலிருந்து அதிகளவிலான பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் என சீனா தரப்பில் பேச்சுவார்த்தையின் போது கூறப்பட்டுள்ளது.

அறிவுசார் பொருட்களின் காப்புரிமைகளை தவறாகப் பயன்படுத்தாமல் இரண்டு நாடுகளும் பரஸ்பரம் வர்த்தகத்தை அதிகரிப்பது, இறக்குமதி பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியை இரண்டு நாடுகளும் குறைத்துக்கொள்வது, உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அதிகளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது போன்ற முக்கிய முடிவுகள் இந்த பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா சார்பில், வணிகத்துறை செயலாளர் வில்புர் எல்.ரோஸ் மற்றும் அமெரிக்க வணிக பிரதிநிதி ராபர்ட் இ.லைத்திசர் ஆகியோரும், சீனாவின் தரப்பில் ஜனாதிபதியின் சிறப்பு அதிகாரி லியூ ஹீவும் இந்த பேச்சுவார்த்தைக்கு தலைமை வகித்தனர்.

பேச்சுவார்த்தைக்கு பின்னர் ஜனாதிபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சீன தொலைத் தொடர்பு நிறுவனங்கள் மீண்டும் தங்களது தொழிலை அமெரிக்காவில் தொடங்க உதவி செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளார். (7)

தேவை ஏற்படின் விடுமுறை வழங்குக வலயத்துக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள தமது பகுதி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பில் பாட சாலை அதிபர்கள் மற்றும் கல்வி வலயப் பணிப்பாளர் கள் தேவை கருதி இறுதித் தீர்மானம் ஒன்றை மேற் கொள்ளலாம் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரி யவசம் அறிவித்துள்ளார். (இ-7)

பல வேலைத்திட்டங்கள் இன்னும் முழுமை பெறவில்லை- யோகேஸ்

(வெல்லாவெளி)

தேசிய நல்லிணக்க அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பல வேலைத்திட்டங்கள் இன் னும் முழுமை பெறவில்லை என தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவ ட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சீனித்தம்பி யோகேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச் சின் நடமாடும் சேவை, வெல்லாவெளியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு தேசிய ஒருமைப் பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமை ச்சர் மனோகணேசனுக்கு விடயங்களை எடுத்துரைத்து பேசுகையிலே அவர் இத னைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் நான்கு மத மக்களும் வாழ் கின்ற மாவட்டம். இன நல் லிணக்கத்திற்கு மிக முக்கி யமான மாவட்டம்.

அந்த வகையில் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய பல அபிவிருத்தி த்திட்ட வேலைகள் இருப்பதா கவும் யோகேஸ்வரன் தெரி வித்தார். (இ-7)

அரசில் அங்கம் வகிப்பதை விட வெளியேறிவிடுவது சிறந்தது

அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு

(மொனராகலை)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டாலும் அரசா ங்கத்தை தனித்து, கொண்டு செல்லும் பலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கிறது என சட்டம் ஒழுங்கு அமைச்சர் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையா ற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

அரசாங்கத்தினுள் இரு ந்து கொண்டு அதனை விமர் சிக்கின்றவர்கள் அரசாங் கத்தில் அங்கம் வகிப்பதை விட வெளியேறுவது சிற ந்தது.

தற்போது அங்கம் வகிக் கும் சுதந்திரக் கட்சியினர் அவ்வாறான மனோநிலை யில் இல்லையென அமை ச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்தார். (இ-7)

கண்டியில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை இலங்கை வரலாற்றில் ஒரு கரும்புள்ளி

அமைச்சர் றிசாத் சுட்டிக்காட்டு

(கண்டி)

கண்டி நிர்வாக மாவட் டத்தில் அண்மையில் ஏற்பட் டிருந்த அசாதாரண நிலைமை, இலங்கை வர லாற்றில் ஒரு கரும்புள்ளியாக மாறியிருப்பதாக சுட்டிக்காட் டிய அமைச்சர் றிசாத் பதியு தீன், வெளிநாடுகளுக்குச் சென்றால் இதைப் பற்றியே கேட்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

கண்டி- கட்டுகஸ்தோட்ட வீதியில் அமைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கட்சிக் காரி யாலய அங்குரார்ப்பண நிக ழ்வு மற்றும் புதிய கிளை அமைப் பாளர் களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல ந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறி னார்.

"கண்டி மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச் சினைகளைத் தீர்த்துக் கொள்ள மக்கள் காங்கிர ஸின் இந்தப் பிரதேச முக்கி யஸ்தர்கள் திட்டமிட்டு பணி யாற்ற வேண்டும். கட்சித் தலைமையும், உயர்பீடமும் உங்களுக்கு எந்த நேரத் திலும் உதவக் காத்திருக் கின்றன." என்று அவர் இதன்போது உறுதியளித் தார். (இ-7)

ஐ.ம.சு. முன்னணியின் செயலராக எஸ்.பி.முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செய லாளர் பதவியை கைப்பற் றும் தீவிர முனைப்பில் முன் னாள் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க ஈடுபட்டுள்ளார் என அரசியல் வட்டாரத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

சில காலங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக எஸ். பி. திஸா நாயக்க கடமையாற்றியிருந்தார்.

பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் எஸ். பி. கடமையாற்றிருந்தார். தற் பொழுது சுதந்திரக் கட்சியின் பொருளாளர் பதவியை எஸ். பி. வகித்து வருகின் றார்.

சுதந்திரக் கட்சியின் முக் கிய பதவிகளில் மாற்றம் செய் யப்பட வேண்டுமென அண் மையில் அரசாங்கத்தை விட்டு விலகிய எஸ். பி. உள் ளிட்ட கட்சியின் உறுப்பினர் கள் கோரி வருகின்றனர்.

இந் நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் பொதுச் செயலாளர் பதவியை எப்படியாவது அடைய வேண்டுமென எஸ். பி. வியூ கம் வகுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

இன்று ஒரு தகவல்

நம்மைவிடப் பெரிய ஆளா?

மற்றவர்களைப் பார்க்கும் போது மனிதனுக்குப் பெரும்பாலும் இரண்டு வகை உணர்வுகள் தோன்றுவது உண்டு.

முதலாவது தாழ்வு மனப்பான்மை. இவர் பெரியவர்; பணக்காரர்; அழகா னவர்; நம்மைவிடத் திறமைசாலி... இப்படி இரண்டாவது போட்டி உணர்வு. அதாவது இவர் நம்மைவிட பெரிய வரா க்கும்? நம்மைவிடப் பணக்காரராக்கும்? என்னைவிட இவள் அழகானவளா என்ன? என் திறமைக்கு இவர் ஈடு கொடுக்க முடியுமா? இப்படி.

தாழ்வு மனப்பான்மை பற்றி நிறையப் பேசிவிட்டோம். இரண்டாவது ரக மனி தர்களைப் பற்றிக் கொஞ்சம் அக்கறை கொள்வோம்.

ரயிலில், பஸ்ஸில், வகுப்பில், ஒரு நிக ழ்ச்சியில், ஒரு பொது இடத்தில் என்று எங்கு பார்த்தாலும் மேற்கூறிய பாணி யில் ஆயிரமாயிரம் பேரைச் சந்திக்கின் றோம். உடனே மேற்கூறிய பாணியில் பல கேள்விகள்.

இது ஒரு தேவையற்ற மனப் போரா ட்டம். இந்தப் போராட்டம் வேறு எதையும் சிந்திக்க விடாதபடி செய்து விடும். இது தேவைதானா? சரி இந்த உணர்வுகள் நமக்கு என்ன நன் மையைச் செய்து விடப் போகின்றன?

இந்த விரோதப் போக்கும் பார்வையும் மனிதர்களை வெறுக்கத்தானே கற்றுக் கொடுத்திருக்கின்றன! நேசிக்க அல் லவே!

மனிதர்களை அவர்கள் நம்மை விடத் திறமைசாலிகளாக இருந்தாலும், நம்மைவிடச் சாதாரணமானவர்களாக இருந்தாலும் அவர்களை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

உள்ளங்களைக் கொள்ளை கொள் வதை வாழ்வின் இலட்சியமாகக் கொண்டால் நமக்குள் விரோதப் பார்வை வளராது. இவர் மனதில் எப்படி இடம் பிடிக்கலாம் என்பது எம் நோக் கமாகி விட்டால் எம்மால் எப்படி அவர் களை வெறுக்க முடியும்?

மாறாக, அவர்களை விரோதப் போக் குடன் பார்த்தால் அந்தப் பார்வை எப்படி யும் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும். இது ஒருவரையொருவர் எப்படி மாட்டம் தட்டுவது, கீழே தள்ளுவது என்கிற ரீதி யில் செயற்படும்படி ஆகிவிடும்.

திறமைகள் எங்கிருந்தாலும் அங்கீக ரித்து அவற்றை நாமும் பெற முடியுமா, கற்றுக் கொள்ள முடியுமா? என்று சிந்திக்க வேண்டும்.

சம பலம் உள்ளவர் என்றால் போட்டி மனப்பான்மையையாவது உண்டாக்கிக் கொள்ளலாம். வாழ்க்கையில் வளர வேண்டும் என்கிற எண்ணம் இந்த வழியிலாவது வந்தால் சரி!

லேனா தமிழ்வாணன்

யாழ். இந்துக் கல்லூரியில் சிறப்பாக இடம்பெற்ற சேக்கிழார் பெருவிழாவும் ஆன்மீக பக்தி ஊர்வலமும்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப காலங்களில் மிக சிறப்பாக இடம்பெற்று வந்த யாழ். இந்துக் கல்லூரியின் சேக்கிழார் பெருவிழா கால் நூற்றாண்டு இடைவெளிக்கு பின்னர் நேற்று மிக சிறப்பாக நடைபெற்றது.

யாழ்.வண்ணை சிவன் கோவிலில் இருந்து சேக்கிழார் திருவுருவப்படம் தாங்கிய ரதம் காங்கேசன்துறை வீதி வழியாக ஊர்வலமாக மாணவர்களினால் எடுத்து வரப்பட்டு யாழ்.இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகளுடன் குருபூசை பெரு விழா ஆரம்பமாகியது.

தொடர்ந்து சமய சொற் பொழிவுகள்.சிறப்புரைகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

நீண்டகால இடைவெளியின் பின்னர் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சமய துறவிகள், பேராசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், சமய ஆர்வலர்கள் என பலரும் பக்தி பூர்வமாக கலந்து கொண்டனர். (இ-7)

அரசாங்கத்தை நம்ப முடியாது தீர்வையும் நீதியையும் சர்வதேசமே தர வேண்டும்

அரியநேத்திரன் கோரிக்கை

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் விடயத்திற்கு தற்போதைய நல்லாட்சி அரசினும் எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தை நாங்கள் நம்ப முடியாது.

எமக் கான தீர்வையும் இந்த இனப்படுகொலைக் கான நீதியையும் சர்வதேசமே எமக்குத் பெற்றுத் தர வேண்டும் என முஸ்லாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிரான் ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலிலே ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மற்றும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் 9 ஆம் ஆண்டு இனப்படுகொலை நாளை நாம் தொடர்ச்சியாக மட்டு. மாவட்டத்தில் அனுஷ்டித்து வருகின்றோம்.

இந் நிலையில் நல்லாட்சி அரசாங்கம் தொடர்ச்சியாக நல்லிணக்கம் என்று கூறிக் கொண்டே இருக்கின்றதே தவிர எமக்கான தீர்வையும் நீதியையும் இதுவரை பெற்றுத் தரவில்லை.

இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண் அரசியல் பயணம் சர்வதேசரீதியில் செல்கின்றது. இந் நேரத்தில் சர்வதேச சமூகத்திடம் நாம் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் இலங்கை அரசாங்கத்தை எம்மால் நம்ப முடியாது.

எனவே எமக் கான தீர்வையும் இந்த படு கொலைகளுக்கான நீதியையும் சர்வதேசமே எமக்கு பெற்றுத் தர வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

நாட்டு மக்களை நாசமாக்கும் சக்திகளை அரசு உருவாக்கியது

மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளை நினைவேந்திய வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் சர்வதேச தரப்பிற்கு முன்வைத்த கருத்தினை ஜனாதிபதியும் பிரதமரும் அனுமதிக்கின்றனரா? வடக்கில் புலிகளை நினைவு கூரும் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கியமை, நினைவுத்தூபி அமைத்தமை என்பன அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்றனவா? என்பதை உடனடியாக நாட்டு மக்களுக்கு கூற வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சியினர் கோரியுள்ளனர்.

வடக்கின் நிலைமைகளை எந்த வகையிலேனும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே ஜனாதிபதி உடனடியாக வடமாகாண சபையை கலைத்து நாட்டின் அமைதியை சீரழிக்கும், பிரிவினையை தூண்டும் விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கூட்டு எதிர்க் கட்சியினர் வலியுறுத்தினர்.

வடக்கில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகள் மற்றும் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்வைத்த கருத்துக்கள் குறித்து தமது நிலைப்பாட்டினை கூறும் போதே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

இது குறித்து கூட்டு எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கூறுகையில்,

வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் சர்வதேச தரப்பிற்கு முன்வைத்த கருத்தினை ஜனாதிபதியும் - பிரதமரும் அனுமதிக்கின்றனரா? என்பதை உடனடியாக மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். வடக்கில் புலிகளை நினைவுகூரும் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கியமை, நினைவுத் தூபி அமைத்தமை என அனைத்துமே அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்றதா? என்பதையும் கூற வேண்டும். இந்த விவகாரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் வாய் திறக்காது அமைதி காத்தால் இந்த நாடு மீண்டும் தீப்பற்றி எரியக்கூடிய நிலைமை ஏற்படும்.

பயங்கரவாதிகளை கொண்டாடுபவர்களுக்காக நினைவேந்தல் நடத்தும் உலகின் ஒரே ஒரு நாடு இலங்கை மட்டுமேயாகும். உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் அவ்வாறு பயங்கரவாதிகள் போற்றப்படுவதில்லை. யுத்தத்தை முடித்த மகிந்த ராஜபக்ஷவை கள்வன் என கூறுகின்றனர். அரசாங்கம் இன்று பிரிவினைவாதிகளின் பக்கம் நின்றே தீர்மானம் எடுக்கின்றது.

ஆகவே அரசாங்கத்தை நாடுவதில் எந்த பிரயோசனமும் இல்லை. மக்கள் அடுத்த கட்டமாக என்ன தீர்மானம் எடுக்கப்போகின்றனர் என்பதே முக்கியமானதாகும். மக்கள் இனியும் இந்த ஆட்சியினை அனுமதித்து நாட்டினை துண்டாட இடமளிக்கப்போகின்றனரா? அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முன் வருவார்களா? என்பதை நாமும் பார்த்துகொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது குறித்து கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் மிகப் பெரிய இனவாத சக்திகள் தலைதூக்கியுள்ளன. வடக்கில் தமிழ் பிரிவினைவாதம், கிழக்கில் முஸ்லிம் பிரிவினைவாதம் என நாட்டின் மக்களை நாசமாக்கும் சக்திகளை அரசாங்கமே உருவாக்கியுள்ளது. வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் சிவாஜிலிங்கம் போன்றோர் இன்று முன்வைக்கும் கருத்துக்கள் மிகவும் பாரதூரமானவை.

வடக்கு-கிழக்கு தனி இராச்சியம் உருவாக்கப்படுவது, சர்வதேச தலையீடுகள், இராணுவத்தை வெளியேற்றுவது போன்ற கருத்துக்களை அவர்கள் தைரியமாக முன் வைக்கக்கூடிய நிலைமையை இன்று அரசாங்கம் ஏற்படுத்திக்காடுத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் புலிகளை நினைவு கூரவும் நினைவுத் தூபி அமைக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகள் அனைத்தையும் ஜனாதிபதியும் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் வேடிக்கை பார்த்து வருகின்றனர்.

நாம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து இந்த நாட்டில் பாரிய அபிவிருத்தி, மற்றும் பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். இன ஒற்றுமையை உறுதிப்படுத்தினோம். ஆனால் இந்த அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளில் மீண்டும் பழைய நிலைமைகளை உருவாக்கியுள்ளது. மீண்டும் வடக்கில் இனவாத சக்திகள் தலைதூக்கி வடக்கு- கிழக்கினை துண்டாடும் நிலைமைகள் உருவாகியுள்ளன.

புலிகள் வடக்கிற்கு தேவை என்ற கருத்துக்களை வெளிப்படையாக கூறும் நிலைமை வடக்கில் உருவாகியுள்ளது. வடமாகாண சபையில் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன, பாடசாலைகளில், கடைகளில், வீடுகளில் புலிகளை நினைவு கூரும் செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே நிறைவேற்று அதிகாரங்கள் இன்னும் ஜனாதிபதி வசமுள்ளது. எனவே வடக்கின் நிலைமைகளை கருத்தில் கொண்டு எந்த வகையிலேனும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது அதிகாரங்களை கொண்டு உடனடியாக வடமாகாண சபையை கலைக்க வேண்டும். அத்துடன் நாட்டின் அமைதியை சீரழிக்கும், பிரிவினையை தூண்டும் விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

இறைச்சிக் கடைக்கு அனுமதியா? ஓமல்பே தேரர் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

கடந்த ஏழு வருடங்களாக மாட்டு இறைச்சிக் கடைக்கு அனுமதி வழங்காதிருந்த அம்பிலிப்பிட்டிய நகர சபை கடந்த நகர சபைக் கூட்டத்தில் வைத்து மீன் வியாபாரக் கடை ஒன்றுக்கு மாட்டிறைச்சியை பொதி செய்து விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளமை கண்டிக்கத்தக்கது என ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய தேரர் ஒருவர் நகர சபையின் தலைவராக இருக்கும் காலத்தில் மாட்டிறைச்சிக் கடை ஏலத்தில் விடுவதை நிறுத்தியிருந்தார். இது சபையின் பெரும்பான்மைப் பலத்துடன் பெற்ற தீர்மானம். அம்பிலிப்பிட்டிய நகர சபைப் பிரதேசத்தில் 99 வீதமானோர் பௌத்தர்கள். விவசாயம் செய்து அதன்மூலம் வாழும் மக்கள். பௌத்த விவசாயிகளும், இந்து மதத்தினரும் மாட்டிறைச்சி சாப்பிட மாட்டார்கள்.

அத்துடன், அம்பிலிப்பிட்டிய பிரதேச மக்களின் கருத்தும் இப்பிரதேசத்துக்கு மாட்டிறைச்சிக் கடை தேவையில்லை என்பதாகவே காணப்பட்டது.

இது இவ்வாறிருக்க, புதிதாக நியமனம் பெற்ற நகர சபை உறுப்பினர்களுக்கு செய்வதற்கு எவ்வளவோ பணிகள் இருக்க, மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவது யாருடைய தேவைக்கு? அந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கியதனால் சபைக்கு வருமானம்தான் வருமா? வருமானம் வரும் என்பதற்காக அனுமதிக்கத் தகாத ஒன்றுக்கு அனுமதி வழங்க முடியுமா? இந்தப் பிரேரணையை அவசரமாகக் கொண்டுவருவதற்கு தேவை இருக்கவில்லை.

யாருடைய தேவைக்காக இதனைச் செய்துள்ளனர். மாட்டிறைச்சிக் கடையொன்று அம்பிலிப்பிட்டிய நகருக்குத் தேவையா? என்பதை அப்பிரதேச மக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அரிசிக்கான விலையைக் கட்டுப்படுத்த உற்பத்தியாளர்கள் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரிசிக்கான விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய நிலையில் அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதுடன் நாட்டில் நெல்லுக்குத் தட்டுப்பாடு இருப்பதாகவும் தகவல் பரவத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர் சங்கத்தினர், நாட்டில் நெல்லுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாகக் கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை.

பாரிய அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் பெருமளவு நெல்லை தங்கள் களஞ்சியங்களில் பதுக்கி வைத்துள்ளனர். அத்துடன் அரிசியின் விலையையும் அநீதியான முறையில் அதிகரித்து விற்பனை செய்கின்றனர்.

தற்போதைக்கு அரிசி ஒரு கிலோவுக்கு 20 ரூபாவுக்கு மேல் அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கின்றனர். எமது சங்கத்தினால் குறைந்த விலைக்கு அரிசி சந்தைப்படுத்தப்பட்டாலும் பொது மக்கள் மத்தியில் போதுமான விழிப்புணர்வு இல்லை.

அத்துடன், பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்வரும் நாட்களில் அரிசியின் விலையை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் தற்போதைக்கு சந்தையில் நெல் தட்டுப்பாட்டை செயற்கையாக ஏற்படுத்தி விலையை அதிகரிக்கச் செய்துள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் வேறு வழியின்றி அரிசியின் விலையை அதிகரிக்க நேரிடுவது தவிர்க்க முடியாமல் போய்விடும்.

எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு பொது மக்களைப் பாதிக்காத வகையில் அரிசிக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றஞ்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் பாரிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவராக ஜனாதிபதியின் சகோதரர் டட்லி சிறிசேன செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

சுதந்திரக் கட்டடம் தாழிறங்கும் அபாயம்

தொழும்பு-07, சுதந்திர சதுக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுதந்திரக் கட்டடத்தின் ஒரு பகுதி, தாழிறங்கும் அபாயத்தில் உள்ளதென கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் கட்டடம், இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதில் அடித்தள பகுதியே இவ்வாறு தாழிறங்கும் அபாயத்தில் உள்ளதெனவும் அந்தப் பகுதியில் பல வெடிப்புகள், வெடிப்புகள் ஏற்பட்டுள்ளனவெனவும் அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டுக்கு, 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அதனை நினைவு கூர்ந்து, சுதந்திரக் கட்டத்தை நிர்மாணிப்பதற்கான அடித்தளத்தை, அன்றைய பிரதமர் டீ.எஸ்.சேனாநாயக்க, 1949 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதியன்று மேற்கொண்டிருந்தார். அந்தக் கட்டடம், 1953 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது.

10 ஆயிரம் அடி விசாலமான இந்த கட்டடத்தின் கீழ், கீழ்மாடி ஒன்றும் உள்ளது. அதில், 108 தரைகீழ் அறைகளும் உள்ளன. இந்தக் கட்டடம் தாழிறங்குவது தொடர்பில், ஆராய்ந்து அறிக்கையிடுமாறு, விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் நிபுணர் குழுவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

பொலிஸார் மீது தாக்குதல்

மூன்று பெண்கள் உட்பட ஐவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

பொலிஸாரைத் தாக்கியதுடன், அவர்களது கடமைக்கு இடையூறு விளைவித்த மூன்று பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேரை விளக்கமறியலில் வைக்க திருகோணமலை நீதவான் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, அவர்களை இன்று 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

திருகோணமலை மொறவெவ - ரொட்டவெவ பகுதியில் கஞ்சா விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சோதனையிட சென்ற பொலிஸார் மீதே இவர்கள் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

கயிலாச யாத்திரை

ஓர் அனுபவப் பகிர்வு 51

பரமசாமி பஞ்சாட்சரம்

தென்னக கயிலாசப் புனருத்தாரணப் பணிகள்

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் திருக்கோணேஸ்வர ஆலயப் புனருத்தாரண அமைப்பு 1950 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுப் பணம் சேகரிக்கப்பட்டது. அத்துடன் அவ்வேளையில் திருகோணமலைப் பகுதிகளில் ஒரு பகுதியினர் ஆலயத் தொன்மங்களை நிலத்திலும் வேறு சிலர் கடலிலும் தேடிச் சிலவற்றை எடுத்தார்கள்.

மறைத்து வைக்கப்பட்டிருந்த பிள்ளையார், கோணேசர், மாதுமை அம்பாள், போகசக்தி, அன்னம் போன்ற சிலைகள் இறைவனுடைய திருவருளால் 1950ஆம் ஆண்டு பலரின் முயற்சியால் கண்டெடுக்கப்பட்டன.

கோயில்களும் ஆயிரங்கால் மண்டபமும் தரைமட்டமாக்கப்பட்ட பின்பும் மண்டபத்தின் ஒரு தூண் மட்டும் எஞ்சியிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இத் தூண் உள்ள இடத்தைச் சுவாமிப் பாறை என்று அழைக்கிறார்கள்.

தூய நோக்கமும், சோர்வுறாத விசுவாசமும், கடும் முயற்சியும் கொண்ட பெரியார்கள் பலரின் அயரா உழைப்பினால் சுமார் 340 வருடங்களுக்குப் பின்னர் தென்கைலாயமாகிய கோணேசர் ஆலயம் மீண்டும் உயிர்த்தெழுந்தது. தேடி எடுத்த தொன்மங்களை வைத்துக் கோயிலை அமைத்து 1963 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. முன்னர் இருந்தது போல ஆலயம் அமையவில்லை என்பதும், கோட்டையில் கோவில் கற்கள் பாவிக்கப்பட்டுக் கட்டப்பட்ட கட்டடங்கள் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருக்கோணேஸ்வர ஆலயம், 1963 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அத்துடன் கண்டெடுக்கப்பட்ட சில சிலைகளும், உடைந்த தனிக்கற் சிலைகளும் கோவில் களஞ்சிய அறையில் இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான சிலைகள் கடலினுள் இன்னும் இருக்கின்றன.

திருக்கோணேஸ்வர ஆலயம் 1963ஆம் ஆண்டு வெளியிட்ட மலரைக் சுவாமிகோடிப் பெரியவர் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் வாழ்த்தி ஆசீர்வதித்திருந்தார்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலே கருவறைக்கு மேல் இருக்கும் கோபுரத்தில் (இராச கோபுரத்தில்) பத்துத் தலையுடன் கூடிய இராவணனின் சிலை இருக்கின்றது. இதைப் பற்றிக் கோவில் காரியாலயத்தில் வேலை செய்யும் ஒருவரிடம் விசாரித்தேன். "குளக்கோட்டு மன்னன் கட்டிய கோவிலிலும், இராசகோபுரத்திலும், மதிலிலும் இராவணேஸ்வரனின் சிலைகள் இருந்ததாகவும், இதைத் திருக்கோணேஸ்வரம் வரலாற்றுத் தொகுப்பு என்ற 9.02.2014 திருகோணமலை கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையால் வெளியிடப்பட்ட நூலைப் படித்தால் விளங்கும்" என்று சொல்லி அந்த நூலை அங்கிருந்து எடுத்துத்தந்தார். அதை நான் வாங்கிக் கொண்டேன். இந்நூல் பலவித தகவல்களை உள்ளடக்கிய சிறந்த நூலாகக் காணப்பட்டது.

கோவிலைச் சுற்றிப் பார்த்தபோது சுவாமி மலைப் பாறையும் ஆயிரங்கால் மண்டபத்தின் ஒரு தூணும் சிறு கோபுர வாசலும் தெரிந்தது. அங்கே சென்றோம்.

சுவாமி மலைப் பாறையில் காணப்படும் கோபுர வாசலால் மேலே இறங்கும் போது இராவணனுடைய சிலையைக் காணக் கூடியதாக இருந்தது.

இராவணன் மூன்றாந் தரமாகத் தவம் இருந்து பெற்ற சிவலிங்கத்தைக் கோகர்ணம் என்னும் இடத்தில் நிறுவிக் கோவில் அமைத்துப் பூசை செய்தார் என்ற சரித்திரப் பதிவைக் காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் எழுதிய நூலிலும், திருமூலர் எழுதிய திருமந்திரத்திலும், மகாவம்சத்திலும் காணப்படுவதாக திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை 2014 ஆம் ஆண்டு வெளியிட்ட நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இராவணேஸ்வரன் கயிலையில் இருந்து கொண்டுவந்த சிவலிங்கம் சுவாமிமலைப் பாறையில் கடற்பக்கத்திலேதான் ஸ்தாபிக்கப்பட்டது என்று எல்லோராலும் நம்பப்படுகின்றது. இதனாலே தான் சுவாமிமலைப் பாறையில் இராவணன் சிலையும், சிலைக்கு முன்பு சிவலிங்கமும், பக்கத்தில் கயிலைக் காட்சியும் இருக்கிறது என்று ஆலயக் காரியாலயத்திலிருந்த உதவியாளர் கூறினார்.

திருகோணமலையை ஆண்ட வெளிநாட்டு அரசுகள் கோயில் இருந்த இடத்தைப் பார்க்க மக்களுக்கு 340 வருடங்களாக அனுமதி வழங்கவில்லை.

(தொடரும்)

ஜனாதிபதி தலைமையில் விசிஷ்ட சேவா விபூஷண பதக்கம் வழங்கும் நிகழ்வு



(கொழும்பு)

இராணுவம், கப்பற்படை மற்றும் விமானப் படைகளின் நிரந்தர படையணிகளின் சிரேஷ்ட அதிகாரிகளால் நிறைவேற்றப்படும் விசேட சேவைகளைப் பாராட்டும் முகமாக வழங்கப்படும் விசிஷ்ட சேவா விபூஷண பதக்கம் (சிறப்பான சேவைக்கான பதக்கம்) வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கடந்த 19ஆம் திகதி முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. (இ-7)

கடலுக்குள் குதித்த இளைஞர்களுக்கு இந்திய இராணுவத் தளபதி பாராட்டு

(கொழும்பு)

காலி கோட்டையில் இருந்து கடலுக்குள் குதித்த இலங்கை இளைஞர்களுக்கு இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் பரிசு வழங்கியுள்ளார்.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் காலி கோட்டையில் இருந்து கடலுக்குள் பாய்ந்த இலங்கை இளைஞர்களின் திறமையை கண்டு அவர் வியந்துள்ளார்.

அத்துடன் அதனைப் பார்த்து ரசித்த பிபின் ராவத் அந்த இளைஞர்களுக்கு பதக்கம் மற்றும் பரிசுகளை வழங்கினார். (இ-7)

சர்வதேச மொடலிங் போட்டி இலங்கையில்

(கொழும்பு)

இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, இளம் பெண்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

குறித்த புகைப்படங்கள் சில சமூக வலைத்தளங்களில் வெளியாகிய நிலையில் சர்ச்சை ஏற்பட்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதி சர்வதேச மட்டத்திலான மொடலிங் போட்டி இலங்கையில் இடம்பெறவுள்ளது. கொழும்பு கலதாரி ஹோட்டலில் பீ.டீ.என்டர்டென்மன்ட் நிறுவனத்தினால் இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கு Miss Tourism Sri Lanka to Miss Tourism World 2018, Mister Ocean Sri Lanka to Mister Ocean International 2018, Global Charity Queen 2018 மற்றும்The Young Beauty of Sri Lanka 2018 என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் பீ.டீ. என்டர்டென்மன்ட் நிறுவனத்தின் தலைமையில் சுற்றுலா அமைச்சில் இடம்பெற்று வருகின்றது.

இறுதிப் போட்டியில் உள்நாட்டு, வெளிநாட்டு மொடலிங் கலைஞர்கள், நடிகர்கள், நடிகைகள், IPl கிரிக்கெட் வீரர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் பயிற்சியை அவதானிக்க சென்ற அமைச்சர் ஜோன் அமரதுங்க அங்குள்ள மொடலிங் கலைஞர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் சில ஊடகங்களில் வெளியாகியுள்ளன. (இ-7)

வைகாசி மாத ராசி பலன்கள்

15.05.2018-14.06.2018



விளம்பி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அதுமட்டுமல்ல, அவர் சுக ஸ்தானத்திற்கும் அதிபதியாவார். அதோடு உங்கள் இராசியிலேயே தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனி பகவானும் வக்கிரம் பெற்றிருக்கிறார்.

இந்த இரண்டு வக்கிர கிரகங்களுக்கு மத்தியில் சிக்கியிருக்கும் உங்கள் இராசி அமைப்பைப் பார்க்கும் பொழுது, எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டியது அவசியம். முயற்சிகளில் குறுக்கீடுகளும், முன்னேற்றப் பாதையில் தடைகளும் வந்து சேரும்.

தன்னம்பிக்கையும் தைரியமும் குறையலாம். மன அழுத்தம் அதிகரிக்கும். பிள்ளைகளாலும் குடும்பத்தில் பக்கபலமாக இருப்பவர்களாலும் மனக்குழப்பம் ஏற்படும். பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் பல பணிகள் பாதியிலேயே நிற்கலாம். இனத்தார் பகை, எதிரிகளின் தொல்லை, மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் நேரமிது. எச்சரிக்கையோடு செயற்பட்டால் எதிலும் வெற்றி காண இயலும்.

இருப்பினும் ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் இயல்பான வாழ்க்கையில் எண்ணற்ற மாற்றங்கள் வரத்தான் செய்யும். எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. எனவே போராடும் வாழ்க்கை மாறி புதிய திருப்பங்கள் ஏற்படவும் சீரோடும், சிறப்போடும் வாழவும் திசா புத்தி பலமறிந்து சிறப்புப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

அதுமட்டுமல்ல, ஜென்மச் சனியின் ஆதிக்கம் அதிகரிப்பதால் சனிக்கிழமைதோறும் விரதமிருந்து சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, சனி கவசமும் பாராயணம் செய்யலாம். 2 இல் கேது 8 இல் இராகு இருப்பதால் சர்ப்ப தோஷமும் அதிகமாக உள்ளது. எனவே அதற்குரிய பரிதிகளை முறையாகச் செய்து கொள்வது நல்லது.

விரயாதிபதி செவ்வாய், 2இல் இருக்கிறார். அஷ்டமாதிபதி சந்திரன் 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனுடன் இணைந்து புத்திர ஸ்தானத்தில் இருக்கிறார். 6 ஆம் இடத்தில் சூரியனும் சுக்கிரனும் உலா வருகிறார்கள். எனவே எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். இல்லற வாழ்விலும் இடையூறுகள் வந்து அகலும். நல்ல வாய்ப்புகள் கிடைத்தும் நம்பிக்கையோடு அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். கிரகங்கள் சாதகமற்ற நிலையில் இருப்பதால் நிதானத்தோடு செய்யும் செயல்களால்தான் நிம்மதி கிடைக்கும்.

சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

மாதத் தொடக்கத்தில் மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இது அவ்வளவு நல்லதல்ல. உத்தியோக மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் உறுதியாகலாம். அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதில் அலைச்சல் ஏற்படும். வெப்ப நோய் வரலாம். பெண் வழிப் பிரச்சினைகள் தலை தூக்கும். சேமிப்புகள் கரைகின்றதே என்று கவலைப்படுவீர்கள். ஜூன் 9 ஆம் திகதி கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத இராஜ யோகம் செயற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள், வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகமும் கைகூடிவரும்.

ரிஷப புதனும்... மிதுன புதனும்...

மே 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான்.

உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை எதிர்பாராத விதத்தில் வந்து சேரலாம். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த சம்பளப் பாக்கிகள் கைக்கு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். அரசு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அவை கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். பிரபலமானவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து, வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள வழிவகுத்துக் கொடுப்பர். ஜூன் 5 ஆம் திகதி மிதுன புதனின் சஞ்சாரத்தால் குடும்பப் பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கலாம். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது.

கிரகங்களின் வக்கிர இயக்கம்!

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் சனியும், இராசிநாதன் குருவும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். திடீர் தொல்லைகள் கூடும். விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது.

இம்மாதம் வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

உங்கள் இராசிநாதன் குருவும், தன சகாய ஸ்தானாதிபதி சனியும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் மாதம் முழுவதும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. எதிர்பாராத விரயங்கள் உண்டு. குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு குறையலாம். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட மன்தைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. தாய் மற்றும் உடன் பிறப்புக்களின் உதவி கிடைக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி இருக்காது. பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நிறையச் செலவிடும் சூழ்நிலை உண்டாகும். சொத்துகளை விற்று தொழிலில் மூலதனமாக்கலாமா? என்ற சிந்தனை உருவாகும். பணிபுரியும் பெண்கள் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

திடீர் இடமாற்றங்களால் மனக் குழப்பம் ஏற்படும். அறுபத்தி மூவர் வழிபாடு அனு கூலம் தரும்.

வக்கிர கிரகங்களின் மீது அக்கறை தேவை!

விளம்பி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு தனாதிபதியாகவும் விளங்குபவர் சனிபகவான். அவர் இம்மாதம் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் சிக்கல்களும் சிரமங்களும் அதிகரிக்கலாம். திடீர் உடல்நிலைத் தொல்லைகளை முன்னிட்டு செலவுகள் அதிகம் செய்ய நேரிடலாம். ஏழரைச் சனி இப்பொழுது நடப்பதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். வழக்குகள் வந்து அலைமோதும். உறவுகள் பகையாகும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் உங்களுக்கு முதல் சுற்று சனி நடைபெறுகின்றதா? 2 ஆவது சுற்று சனி நடைபெறுகின்றதா? இல்லை 3 ஆவது சுற்று நடைபெறுகிறதா? என்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது. முதல் சுற்றிலோ, 3 ஆவது சுற்றிலோ சனி இருக்குமேயானால் துயரங்கள் தொடர்கதை போல் வந்துகொண்டேயிருக்கும். 2 ஆவது சுற்று ஏழரைச் சனி நடைபெறுமேயானால் ஏதோ ஓரளவேனும் நன்மைகளைக் கொடுப்பார். ஆனால் அப்படிக் கொடுக்கும் சனியும் இம்மாதத்தில் வக்கிர இயக்கத்தில் அல்லவா இருக்கிறார்.

எனவே வரவு திருப்திகரமாக இருந்தாலும் வருமானத்தைக் காட்டிலும்இருமடங்கு செலவாகலாம். எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு இரு முறை செய்யும் சூழ்நிலை உருவாகும். நண்பர்களையோ, நம்பிக்கைக்கு உரியவர்களையோ நம்பி ஏதேனும் ஒருவேலையைக் கொடுத்தால், அது நடைபெறாமலேயே மீண்டும் உங்களிடம் வந்துசேரும்.

அதேநேரத்தில் ஜென்ம இராசியில் கேதுவும், செவ்வாயும் இருக்கிறார்கள். சுக ஸ்தானத்தில் ராகு இருப்பதால், வாழ்க்கைத் துணைவழியே பிரச்சினைகள் உருவாகிக் கொண்டேயிருக்கும். வாங்கிய சொத்துகளை விற்கவும் நேரிடலாம். முக்கிய புள்ளிகளைப் பகைத்துக் கொள்வதன் மூலம் முன்னேற்றத்தில் பாதிப்புகள் அதிகரிக்கும். எனவே சர்ப்ப தோஷ நிவர்த்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. மேலும் 10 ஆம் இடத்து குரு பதவி மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்கும். சுக்கிர பலம் மட்டும் நன்றாக இருக்கிறது. ஆயினும் அவரோடு அஷ்டமாதிபதி சூரியனும் இணைந்திருப்பதால் சுக்கிரன் வலிமையிழந்து விடுகிறார். எனவே எதிர்பார்த்த நற்பலனை அவராலும் தர இயலாது.

6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 4 ஆம் இடத்தில் சந்திரனோடு இணைந்திருப்பதால் உறவினர் பகை அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். எனவே யாருடனும் பக்குவமாகப் பேசுவது நல்லது. கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். நவக்கிரக வழிபாடு நன்மையை வழங்கும். மேலும் ஒவ்வொரு சனிக்கிழமையும் அதிகாலையில் ஆனைமுகப்பெருமானையும், அடுத்து உச்சி காலத்தில் சனிபகவான், அந்திம நேரத்தில் அனுமன் ஆகியோரையும் வழிபட்டால் மனக்கவலை நீங்கும்.

சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

மாதத் தொடக்க நாளில் மிதுனத்திற்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்திற்கு வரும்பொழுது தொழில், உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகைகூடும். தொழிலை விரிவு செய்வதற்கான தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். வங்கிகளில் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. ஜூன் 9 ஆம் திகதி கடகத்திற்கு சுக்கிரன் செல்லும் பொழுது, மங்கல ஓசை மனையில் கேட்கவில்லையே என்ற கவலை அகலும். தெய்வத்திருமணங்களில் அரங்கேறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. விலகிச் சென்ற சொந்தங்களும், வெறுப்போடு இருந்த நண்பர்களும் விரும்பி வந்திணைவர்.

ரிஷப புதனும்... மிதுன புதனும்..

மே 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதன்மூலம் உதிரி வருமானங்கள் வந்துசேரும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். ஜூன் 5 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். எனவே பூர்வீகச் சொத்துகள் கைக்கு கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். பஞ்சாயத்துகள் சாதகமாக முடியலாம். தந்தை வழி ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் நோயில் இருந்து நிவாரணம் கிடைக்க மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள்.

கிரகங்களின் வக்கிர இயக்கம்!

உங்கள் இராசிக்கும் 2ஆம் இடத்திற்கும் அதிபதியான சனியும் 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், சில சமயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. வெளிநாடு சென்றவர்கள் அங்கு வேலை கிடைக்காமல் திரும்பலாம். குடும்பச் செலவுகள் மிகமிகக் கூடுதலாக இருக்கும்.

இம்மாதம் வடக்கு நோக்கிய விநாயகரை வழிபட்டால் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் விரயச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றங்களும் இடமாற்றங்களும் ஒரு சிலருக்கு வெகுளிதில் வந்துசேரும். ஆரோக்கியத் தொல்லையும், அசதியும் அதிகரிக்கும். பயணங்களால் சோர்வு ஏற்படும். குடும்ப முன்னேற்றத்தில் மூன்றாம் நபரின் குறுக்கீடுகளைத் தவிர்ப்பது நல்லது. கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அதிகரிக்கும். விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் அமைதியை வரவழைத்துக் கொள்ளலாம். வீண் செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும் என்றாலும், சகோதர வர்க்கத்தினர்களால் இடையூறுகள் வரலாம். அவர்கள் குணமறிந்து நடந்துகொள்வது நல்லது. 10 ஆம் இடத்து குருவால் பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றங்கள் வரலாம். எதிர்பார்த்த லகுகைகளில் தாமதம் ஏற்படும். ஜென்ம கேது, 7 இல் இராகு இருப்பதால் சர்ப்பக்கிரக வழிபாடுகளை மேற்கொண்டால் சந்தோசத்தை தக்க வைத்துக் கொள்ள இயலும்.

வரவைக் காட்டிலும் செலவு கூடும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

சர்வதேச நாடுகளின் அழுத்தம் தொடர்கிறது

நாட்டுக்கு எது நல்லது என்று நாங்களே முடிவு செய்வோம்

ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

(கொழும்பு)

தான் ஈரானுக்கு விஜயம் செய்வதை அவர்கள் தடுக்க முனைந்தார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்முடன் ஈரானுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஈரானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி தெஹ்ரானிலுள்ள விடுதியில் ஓய்வாக இருந்த போதே ஊடகவியலாளர்களிடமே இதனைக் கூறினார்.

எனினும், தமக்கு அழுத்தம் கொடுத்தது கொழும்பைத் தளமாகக் கொண்ட மேற்குலக இராஜதந்திரிகளா, உள்ளூர் அதிகாரிகளா? அல்லது இருதரப்பினருமா? என்பதை

அவர் வெளியிடவில்லை.

"எனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது இது தான் முதல் தடவையல்ல.

எமது நாடு இறைமையுள்ள நாடு. நாட்டுக்கு எது நல்லது என்று நாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஈரானுக்குப் போகக் கூடாது என்ற கோரிக்கைகளை நான் செவிசாய்க்கவில்லை.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கட்டாருக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த போதும், இதேபோன்ற அழுத்தத்தை சந்தித்தேன். அங்கு போகக் கூடாது என்று நான் கேட்கப்பட்டேன்.

அதனை நிராகரித்து விட்டு, அரசமுறைப் பயணத்தை மேற்கொண்டேன். இன்று கட்டார் அமீர் இலங்கையின் நல்ல நண்பராக இருக்கிறார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், கடந்த மார்ச் 22 ஆம் திகதி, மூன்று நாட்கள் பயணமாக பாகிஸ்தானுக்குச் செல்ல முயன்ற போதும், எனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

பாகிஸ்தானின் குடியரசு தின நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்கேற்க விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தேன்.

எனது அந்த முடிவினால் சிலர் அதிர்ச்சியடைந்திருந்தனர் என்பது எனக்குத் தெரியும்.

நான் சரியான முடிவையே எடுத்தேன் என்பதில் உறுதியாக இருந்தேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

அதிக கடனால் வந்த வினை

அம்பாந்தோட்டை செயற்கைத் தீவை தராவிட்டால் அடுத்த கட்ட குத்தகைப் பணம் தர மாட்டோம்

இலங்கையுடன் மல்லுக்கட்டும் சீனா

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட செயற்கைத் தீவுக்கு சீனா உரிமை கோரியுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்ட கடன் நெருக்கடியைப் பயன்படுத்தி, அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு சீனா பெற்றது.

இந்நிலையில், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வெளியே அமைக்கப்பட்ட செயற்கைத் தீவுக்கு சீனா இப்போது உரிமை கோரியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைப்பதற்காக நிலப்பரப்பில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண்ணைக் கொண்டு, துறைமுகத்துக்கு வெளியே செயற்கைத் தீவு ஒன்று அமைக்கப்பட்டது.

50 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்ட இந்த தீவு 110 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்டது. இதனை சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக பயன்படுத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

இந் நிலையிலேயே, அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டுக்குள், இந்தத் தீவும் அடங்கியிருப்பதாகவும், அதனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் சீனா வலியுறுத்தி வருகிறது.

அத்துடன், தீவைத் தம்மிடம் கையளிக்கும் வரை, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான அடுத்தகட்ட தவணைக் கொடுப்பனவை வழங்க முடியாது என்றும் அறிவித்துள்ளது.

சீனாவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இந்தத் தீவை ஒப்படைப்பதாயின் தென்மாகாணசபையின் ஒப்புதலை அரசாங்கம் பெற வேண்டும்.

ஆனால் தென் மாகாண சபை இதனை கடுமையாக எதிர்த்து வருவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

சீனாவிடமிருந்து 6 புதிய விமானங்களை இலங்கை விமானப்படை வாங்கியது

(கொழும்பு)

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆறு புத்தம் புதிய PT-6 ரக பயிற்சி விமானங்கள் இலங்கை விமானப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

சீனாவின் தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி-ஏற்றுமதி நிறுவனத்திடமிருந்து இந்த அடிப்படைப் பயிற்சி விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கல ஜயம்பதி கடந்த 15ஆம் திகதி, சீனாவின் நான்சாங் நகரிலுள்ள ஹொங்டு விமான தொழிற்சாலையில் நடந்த நிகழ்வில் இந்த விமானங்களைப் பொறுப்பேற்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

இந்த விமானங்கள் இலங்கை விமானப்படை அணிமையில் அறிமுகப்படுத்தியுள்ள நிறத்தைக் கொண்டதாக இருப்பதுடன், உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய வகையில், தயார் நிலையில் இருப்பதாகவும், இலங்கை விமானப்படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப்படையின் 12ஆம் இலக்க பயிற்சி அணியில் இந்த விமானங்கள், இடம்பெறவுள்ளதுடன், சீனாவிலுள்ள விமானப்படையின் பயிற்சி பாடசாலையில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

சுமார் 5 மில்லியன் டொலர் செலவில், MW PT-6 பயிற்சி விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2015ஆம் ஆண்டு இலங்கையின் தேசிய பாதுகாப்புச் சபை அனுமதியளித்திருந்தது.

இந்த வகை விமானங்கள், சீன விமானப்படை, மற்றும் அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளிலும் பயன்பாட்டிலுள்ளது. ஒற்றை இயந்திரம் கொண்ட இந்தப் பயிற்சி விமானம், ஆரம்ப கட்ட விமானிகள் பயிற்சிக்காக பயன்படுத்தப்படுகிறது குறிப்பிடத்தக்கது. (இ-7)

செய்தித்துளிகள்

காய்ச்சலுடன் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாதீர்

(கொழும்பு)

"தங்களுடைய பிள்ளைகள், காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தால் அல்லது காய்ச்சல் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டால், பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்" என தென்மாகாண கல்வியமைச்சர் சந்திமா ரசபுத்ரா, பெற்றோருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். (இ-7)

3 கல்வி வலயங்களுக்கு விசேட விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)

தொடர்ச்சியாக நிலவி வரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, தெஹியோவிட்ட மற்றும் நிவிதிகல ஆகிய கல்வி வலய பாடசாலைகளுக்கு நேற்றும் இன்றும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மாணவர்களின் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

மூங்கிலில் சிக்குண்டிருந்த சிறுவனின் சடலம் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - வெல்லாவெளியிலுள்ள மண்டூர் மூங்கிலாற்றின் மூங்கில்களுக்கிடையில் சிக்குண்டிருந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதுடன், மண்டூர், கணேசபுரத்தை சேர்ந்த உமாபதி கிஷான் எனும் 15 வயது சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் நண்பகலளவில் தனது நண்பர்கள் சிலருடன் மூங்கிலாற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து அவருடன் நீராடிக் கொண்டிருந்த ஏனைய சிறுவர்கள் இந்த விபரத்தை அக்கம் பக்கத்திலிருந்தவர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

உடனடியாக கிராம மக்கள் ஆற்றுப் பகுதியெங்கும் தேடுதலை மேற்கொண்டபோது காணாமல்போன சிறுவனின் சடலம் ஆற்றுக் கரைகளில் வளர்ந்திருக்கும் மூங்கில்களுக்கிடையில் சிக்குண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. (இ-7)

ஆனமடுவவில் அதிக மழைவீழ்ச்சி

கடந்த 24 மணித்தியாலத்தில் ஆனமடுவ பகுதியில் அதிகப்படியாக 353.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணிவரையான காலப் பகுதியிலேயே குறித்த மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மேலும் ஆதிகமவில் 339 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் தமன்கடுவவில் 316 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் மாத்தளையில் 267.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் இரத்தினபுரியில் 232.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் ஹரிஸ்பத்துவவில் 232 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் குருகுலே கங்கவில் 227 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

வியத்தில் ஒருவர் உயிரிழப்பு பொலிஸ் அதிகாரி படுகாயம்

(ஓட்டமாவடி)

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வாழைச்சேனையை சேர்ந்த அலியார் முஹம்மது ஹனீபா (வயது-57) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி பகுதியிலுள்ள பிரதான வீதியில் ஆட்டோ வீதியை விட்டு தடம்புரண்டு குடைசாய்ந்தபோது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் அதிகாரி அதில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார். (இ-7)

சிறுவர் அரங்கம்

உயர்ந்த உள்ளம்

(நேற்றைய தொடர்ச்சி)

தோல்வி அடைந்தால் தன் ஆஸ்தான கவிஞர் பதவி போய் விடும். இப்படி பலவித சிந்தனையில் வேர்த்துப் போனான் பசுபதி.

அரசனின் பிறந்த நாள் வந்தது. நாடே விழாக்கோலம் பூண்டது. மக்கள் அனைவரும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாக இருந்தனர். போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று முடிவெடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் பசுபதி. வருவது வரட்டும் என்று போட்டியில் கலந்து கொள்ள முடிவு செய்தான் பசுபதி. கவியரங்கம் ஆரம்பமாகிவிட்டது.

அரசர் சிம்மாசனத்தில் அமர்ந்து விட்டு கவிஞர்களை வாழ்த்தினார். பிறகு, "கவிதை போட்டியை ஆரம்பிக்கலாம்," என்றார்

பல கவிஞர்களும் தங்கள் கவிதைகளை அழகாக பாடினர். அதைக் கேட்டு அரசர் மகிழ்ச்சி அடைந்தார்.

அனைத்தையும் கவனித்துக் கொண்டு மௌனமாக இருந்தான் விமலன்.

அடுத்தபடியாக ஆஸ்தான கவிஞன் பசுபதி கவிதை பாடுவார் என்ற அறிவிப்பு வந்த போது விமலன் சிரித்தான். அதைக் கவனித்த பசுபதிக்கு கடும் கோபம் வந்தது. ஆனால், கோபத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தான். பசுபதி எழுந்து அரசனை வணங்கிவிட்டு கவிதை பாட தொடங்கினான். அரசர் உட்பட அனைவரும் பசுபதியை பாராட்டினர்.

விமலன் அந்தக் கவிதையை அக்கு வேறு ஆணி வேறாக பிரித்து விமர்சனம் செய்து அனைவரையும் வியக்க வைத்தான்.

முதல் பரிசு பசுபதிக்கே கிடைத்தது. பரிசு பெற்றாலும் அவன் மனதில் விமலன் மீது இருந்த ஆத்திரம் தணியவில்லை. பழி வாங்கும் எண்ணம் அவனை ஆட்டி வைத்தது. அவன் ஒரு வாளுடன் வீட்டை விட்டு ஓடினான். "விமலனை கொன்றுவிட்டு தான் மற்றவைகளை கவனிப்பேன்" என்று மனதுக்குள் கூறிக்கொண்டே அவன் வீட்டை நோக்கி ஓடினான். யார் கண்களிலும் படாமல் விமலன் வீட்டு பூங்காவில் ஒளிந்து கொண்டான். அப்போது விமலன் தன் மனைவியுடன் பேசும் சத்தம் கேட்டது. அவன் மெதுவாக ஜன்னலை அடைந்து வீட்டுக்குள் எட்டி பார்த்தான்.

"இன்னிக்கு கவிதை போட்டியில் பரிசு கிடைத்தது. யாருக்கு?" என்றாள் மனைவி. "வேறு யாருக்கு, நம்ம பசுபதிக்கு தான்," என்றான் விமலன்.

"பசுபதிக்கு அற்புதமான திறமை இருப்பதாக நீங்களே சொல்கிறீர். பிறகு ஏன் தினமும் அவர் கவிதைகளை விமர்சனம் செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்றாள் மனைவி.

"அடியே! பசுபதி அற்புதமான கவிஞன்தான். அவன் திறமையை மேலும் சிறப்பாக்குவதற்காக தான் அப்படி விமர்சனம் செய்கிறேன். என் விமர்சனத்துக்கு பயந்து அவன் மேலும் சிறந்த கவிதைகளைப் படைக்க வேண்டும் என்று கடும் முயற்சி செய்து கொண்டிருக்கிறான்.

அந்த முயற்சி அவனுக்கு பெரும் வெற்றியை தேடித் தருகிறது. இன்று அவனிடம் போட்டி போட்டு வெற்றி பெறும் தகுதி யாருக்கும் கிடையாது. இப்போது, நான் ஏன் விமர்சனம் செய்கிறேன் என்ற கேள்விக்கு விடை கிடைத்து விட்டதா?" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தான்.

வாளுடன் விமலனை கொல்ல வந்த பசுபதி இந்த உரையாடலை கேட்டு அதிர்ச்சி அடைந்தான். இப்பேற்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்டவரை தான் தவறாக நினைத்துக் கொலை செய்யும் அளவுக்கு வந்துவிட்டோமே என்று நினைத்த போது அவனுக்கு அழுகையே வந்தது. அவன் அழுது கொண்டே ஓடிச் சென்று விமலனின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டான். "அய்யா! நான் உங்களைத் தவறாக நினைத்தேன். இந்த உயர்ந்த உள்ளத்தை புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. என்னை மன்னித்து விடுங்கள். அந்த பரிசு உங்களை தான் சாரும். அதைப் பெறும் தகுதி எனக்கு இல்லை," என்று கூறி அழுதான் பசுபதி.

முற்றும்.

2018.05
22
இன்றைய நாளின்
முன்னைய பதிவுகள்

❖1809-வியென்னாவுக்கு அருகில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் முதற்தடவையாக தோற்கடிக்கப்பட்டன.

❖1834-இலங்கையில் சட்டசபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.

❖1840-நியூ சவுத் வேல்சுக்கு பிரித்தானியக் குற்றவாளிகளை நாடு கடத்துதல் நிறுத்தப் பட்டது.

❖1906-ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.

❖1915-ஐக்கிய அமெரிக்காவில் லாசன் முனை வெடித்தது.

❖1915-ஸ்கொட்லாந்தில் ஐந்து தொடருந்துகள் ஒன்றோடொன்று மோதியதில் 227 பேர் கொல்லப்பட்டனர். 246 பேர் காயமடைந்தனர்.

❖1942-இரண்டாம் உலகப் போர்: மெக்சிக்கோ நேச நாடுகள் தரப்பில் போரில் குதித்தது.

❖1958-இலங்கை இனக்கலவரம்-இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

❖1968-அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஸ்கோர்ப்பியன் மூழ்கியதில் 99 பேர் கொல்லப்பட்டனர்.

❖1972-இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.

❖1990-வடக்கு யேமன் மற்றும் தெற்கு யேமன் ஆகியன இணைந்து யேமன் குடியரசு ஆகியது.

❖1990-விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.

பிறப்புகள்

❖1408-அன்னமாச்சாரியார், இந்து சமயப் பெரியார், கர்நாடக இசை அறிஞர் (இ. 1503)

❖1844-மேரி கசாட், அமெரிக்க ஓவியர் (இ. 1926)

❖1859-ஆர்தர் கொனன் டொயில், பிரித்தானிய எழுத்தாளர் (இ. 1930)

❖1867-உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், தமிழக கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1946)

❖1900-தேவதாஸ் காந்தி, இந்திய விடுதலைச் செயற்பாட்டாளர், காந்தியவாதி (இ. 1957)

❖1926-தமிழ்வாணன், தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (இ. 1977)

❖1935-சி.வி.சந்திரசேகர், தமிழக பரதநாட்டியக் கலைஞர், நடன அமைப்பாளர்

❖1940-வை. சச்சிதானந்தசிவம், ஈழத்து ஓவியர், எழுத்தாளர் (இ. 2006)

❖1940-பி. விருத்தாசலம், தமிழகத் தமிழறிஞர், பேராசிரியர் (இ. 2010)

❖1944-வைகோ, தமிழக அரசியல்வாதி

❖1946-இலியூத்மிலா ஸாசிஸ்யெவ்னா சுரவ்லோவா, ரஷ்ய-உக்ரைனிய வானியலாளர்

❖1954-சுச்சி நாக்காமுரா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய-அமெரிக்க இயற்பியலாளர்

❖1959-மெகபூபா முப்தி, இந்திய அரசியல்வாதி

❖1984-டஸ்டின் மாஸ்கோவிட்ஸ், முகநூலை ஆரம்பித்த அமெரிக்கத் தொழிலதிபர்

❖1987-நோவாக் ஜோக்கொவிச், செர்பிய டென்னிஸ் வீரர்

இறப்புகள்

❖337-முதலாம் கான்ஸ்டன்டைன், உரோமைப் பேரரசர் (பி. 272)

❖1457-ரீட்டா, இத்தாலியப் புனிதர் (பி. 1381)

❖1545-சேர் சாசூரி, இந்திய அரசர் (பி. 1486)

❖1885-விக்டர் ஹியூகோ, பிரான்சிய புதின எழுத்தாளர், கவிஞர் (பி. 1802)

❖1967-லாங்ஸ்ரன் ஹியூஸ், அமெரிக்கக் கவிஞர், எழுத்தாளர் (பி. 1902)

❖1991-ஸ். ஏ. டாங்கே, இந்திய அரசியல்வாதி (பி. 1899)

சிறப்பு நாள்

❖அடிமை ஒழிப்பு நாள் (மார்தினிக்கு)

❖குடியரசு நாள் (இலங்கை)

❖ஒற்றுமை நாள் (யெமன், 1990)

❖பன்னாட்டு பல்லுயிர் பெருக்க நாள்

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி	மருதனார் மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	100	60	60	80	60
உருளைக்கிழங்கு	100	100	100	95	120	100
புக்கமிளகாய்	80	100	90	60	100	70
தக்காளி	200	160	160	110	200	180
மரவள்ளிக்கிழங்கு	30	30	40	40	40	35
கோவா	100	120	100	60	120	70
கரட்	200	200	200	80	240	180
பூசணி	40	20	40	20	40	30
புடோல்	90	60	80	50	120	80
வாழைக்காய்	50	40	40	40	50	60
சின்ன வெங்காயம்	140	200	160	150	140	140
பெரிய வெங்காயம்	100	100	100	80	100	100
பாகற்காய்	160	120	100	110	160	160
வெண்டிக்காய்	80	100	80	60	160	60
கருணைக்கிழங்கு	60	100	60	—	80	70
பயற்றங்காய்	140	100	80	70	100	120
லீக்ஸ்	200	250	200	180	240	200
பீற்றூட்	80	100	60	35	100	60
கறிமிளகாய்	100	100	120	60	120	100
முருங்கைக்காய்	250	100	200	130	240	240
போஞ்சி	200	250	200	—	240	200
கத்தரிதம்புள்ள	50	100	50	50	60	50
கீரை-1பிடி	30	30	30	30	40	35
தேசிக்காய்	200	200	220	200	250	200
தேங்காய் (ஒன்று)	60	100	75	30-70	50-75	85
இராசவள்ளி	200	200	160	—	160	170
வெங்காயப்பூ	250	—	—	—	—	200
முள்ளங்கி	100	—	100	30	120	80
பொன்னாங்காணி	40	—	40	10	30	30
வல்லாரை	15	—	15	10	20	35
ஈரப்பலா	—	—	—	—	120	100

ஒட்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை கலைத்ததாம்.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

காணி சுவீகரிப்பு என்ற பெயரில் ஓர் ஊர் பறிபோகப் போகிறது

மண்டைதீவுக் கிராமம் யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மிய தூரத்தில் இருப்பது, யாழ்ப் பாணத்தின் எல்லையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் மண்டைதீவின் எல்லை ஆரம்பிக்கிறது.

கூடவே பண்ணைக் கடல் பரப்பில் இருக் க்கூடிய சிறுத்தீவு, குருசுத்தீவு என்பனவும் மண்டைதீவுக் கிராமத்துக்குட்பட்டவை.

ஆக, யாழ்ப்பாணத்துக்குள் அடங்கக்கூடிய ஓர் ஊராக மண்டைதீவைக் குறிப்பிடலாம்.

மிகச் சிறிய இவ்வூர் 1991ஆம் ஆண்டில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக சின்னாபின்னமாயிற்று.

யுத்த சூழ்நிலையில் இடம்பெயர்ந்த இவ்வூர் மக்கள் புலம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் வாழவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகினர்.

1991இல் ஏற்பட்ட இடப்பெயர்வுக்குப் பின்னர் மண்டைதீவு உள்ளிட்ட தீவகம் வழமைக்குத் திரும்ப முடியாமல் தத்தளிக்கிறது.

இவ்வாறான அவலநிலைக்கு தமிழ் அரசி யல்வாதிகள் தீவகத்தை ஒதுக்கிக் கொண்ட தும் முக்கிய காரணம் எனலாம்.

அதாவது வலி.வடக்கு, வலி.கிழக்கு ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்வையும் காணி விடுவிப்பையும் வலியுறுத்திய அளவுக்கு தீவ கத்தில் இருந்து இராணுவத்தை வெளியேறு மாறு கோருவதிலோ அல்லது தீவகத்தில் மக் களைக் குடியமர்த்துவதிலோ கவனம் செலுத் துவதில் தமிழ் அரசியல் தலைமை அறவே கருசனை கொள்ளவில்லை.

இதன்காரணமாக தீவகம் தனது முழு வளத்தையும் இழந்து கைவிடப்பட்ட பிரதேசத் துக்குரிய அடையாளங்களை மட்டும் தன்ன கத்தே கொண்டுள்ளது.

இந்நிலையில் மண்டைதீவு கிழக்கில் இருக் கக்கூடிய 18 ஏக்கர் விவசாய நிலத்தை கடற்படைக்குச் சுவீகரிப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதெனும் போது, மிகச்சிறிய கிராமமாகிய மண்டைதீவு முழுமை யாக கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் வரப் போகிறது என்பது மட்டும் உறுதியாகிறது.

அதாவது 18 ஏக்கர் விவசாய நிலத்தை சுவீகரிப்புச் செய்வதனூடாக மண்டைதீவுக் கிராமத்தை கடற்படை தனக்குரியதாக்கப் போகிறது.

எனினும் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதாகத் தெரியவில்லை.

வட மாகாணத்தில் படையினருக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் போதெல் லாம் அந்த மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் கூடிநின்று அதனைத் தடுத்து நிறுத்த போராடு கின்றனராயினும் மண்டைதீவில் நடக்க இருக் கும் காணி சுவீகரிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாக இருப்பதன் பின்னணியில்,

மண்டைதீவை கடற்படைக்குத் தாரைவார்த் துக் கொடுக்க அரசுடன் உடன்பட்டு விட்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எதுஎவ்வாறாயினும் மண்டைதீவில் கடற் படைக்கென 18 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டால் அவ்வூர் மக்கள் அங்கிருந்து வெளியேறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

போதைப்பொருள் விற்பனைக்கு எதிராகவும் பொது அமைப்புக்கள் போராட வேண்டும்

சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் கோரிக்கை

(சாவகச்சேரி)

பசு வதைக்கு எதிராக இந்து அமைப்புக்கள் போரா டுவதைப் போல புனித தின ங்களில்மதுபானம்விற்பனை செய்தல் போதைப்பொருள் கடத்தல் என்பவற்றுக்கு எதி ராகவும் போராட வேண் டும் என சாவகச்சேரி நகர சபை யின் உப தவிசாளர் அ.பாலமயூரன் தெரிவித் துள்ளார்.

பசுவதைக்கு எதி ராக இந்து அமைப்புக்கள் நேற்று சாவகச்சேரியில் நடத்திய கவனயீர்ப்பு பேரணியின் நிறைவில் சாவகச்சேரி நகர சபைக்கு மகஜர் ஒன்றையும கையளித்திருந்தனர்.

அதனைப் பெற்றுக் கொண்டு கருத்து தெரிவிக் கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மராட்சியில்போதைப் பொருள் கடத்தல்கள், சட்ட விரோத மதுபான விற்பனை கள், புனித தினங்களில் மது பான விற்பனை போன்றன இடம்பெற்று வருகின்றன.

இவற்றிற்கு எதிராகவும் இந்த அமைப்புக்கள் போராட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு நகராட்சி மன்றத்தினரும் எமது பங்க ளிப்பை வழங்க முடியும். மேலும் யாராவது பசுமாடு களை இறைச்சிக்காக வெட்டி னால் அதுதொடர்பில் எமக்கு முறையிட்டால் உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கப்ப டும்.

அதுமட்டுமின்றி பசுவ தைக்கு எதிராக நகராட்சி மன்றமும் குரல் கொடுக்கும் எனவும உப தவிசாளர் அ.பால மயூரன் மேலும் தெரிவித் துள்ளார். (இ-89)

வெனிசுவெலா தேர்தலில் மதுரோ மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு

(கராகஸ்)

வெனிசுவெலாவில் நடை பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில், தற்போதைய ஜனா திபதி நிக்கோலஸ மதுரோ மீண் டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடை பெற்ற தேர்தலில் 93 வீதமான வாக்குப் பதிவுகள் இடம்பெற் றிருந்த நிலையில், அதில் 68 வீத வாக்குகளை மதுரோ பெற் றிருப்பதாக தேசிய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஆனால், இந்த தேர்தல் செல்லுபடியற்றது எனத் தெரி வித்து பிரதான எதிர்க்கட்சி வேட்பாளர் ஹென்ரி ஃபால்கன் தேர்தல் முடிவுகளை நிராக ரித்துள்ளார். வாக்கெடுப்பின் சட்டபூர்வ தன்மையை எதிர் த்த எதிர்க்கட்சி வேட்பாளர், ஒரு புதிய தேர்தலுக்கு அழை ப்பு விடுத்துள்ளார்.

பெரும்பாலான எதிர்க் கட்சிகள் வாக்கெடுப்பை புறக் கணித்திருந்த போதிலும், வெனிசுவெலா தேர்தல் சுதந திரமான மற்றும் நியாயமான முறையில் இடம்பெற்றிருந்த தாக அரச அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை, தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள் ளப் போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகமும் அறிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (7)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

அகங்காரத்தை எவ்வாறு ஒழிப்பது?

நமது சரீரத்தின் நான்கு பாகங்கள் சித்தம், அகங்கா ரம், அறிவு, மனது ஆகிய வைகளாகும். இதில் மனது மிகப் பிரதா னமானதாகும்.

மனதுதான் நமது சுக துக்கங்களுக் குக் காரணமாகும். குடும்ப வாழ்க்கைக் குத் தேவை யானவ ற்றை தேர்ந்தெ டுப்பது மனதுதான். ஐந்து வகை அறிவுகளின் மூலம் தான் தேவை யானவற்றை உட்கொ ண்டு மனதானது சுக துக்கங்களுக்குக் காரணமாக அமைகின்றது. ஐந்து வகை அறிவுகளையும் முறைப்படு த்துவது மனமும் அறிவு மாகும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும் போது நல்ல விடயங்களும் தீய எண்ணங்கள் தோன்றும் போது தீய காரியங்களும் நடைபெறக் காரணமாகிறது.

அளவு கடந்த ஆசைகள் மனித மனதை சஞ்சலத் திற்குள்ளாக்குகிறது. மனதைக் கட்டுப்படுத்த முடியாதத னால்தான் ஆசைகள் வளர்ந்து தீய செயல்களுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. *(தொடரும்)*

ஏ9 வீதி தாழிறங்கியது

(கண்டி)

கண்டி- யாழ்ப்பாணம் ஏ9 வீதியின், ஒரு பகுதி தாழி றங்கியுள்ளதால், அந்த வீதி யைப் பயன்படுத்தும் சாரதி கள் மிகமிக அவதானத்து டன் வாகனங்களை செலுத் துமாறு அறிவுறுத்தப்பட்டு ள்ளனர்.

கண்டி மாவட்டத்தில், அலவத்துகொட 8ஆம் மைல் கல் பகுதியிலேயே, வீதியின் ஒரு பகுதி தாழிறங்கியுள் ளது.

இந்த வீதி, இரண்டு ஒழு ங்கைகளை கொண்டிருந் தாலும், வீதி தாழிறங்கிய பகுதியில் மட்டும், ஒரு ஒழு ங்கை மட்டுமே பயன்படுத்து வதற்கு கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் தற் போது நிலவுகின்ற சீரற்ற காலநிலை, தொடருமாயின், இந்த வீதியின் சில பகுதிகள் ஆங்காங்கே தாழிறங்கும் என்றும் அச்சம் வெளியிடப் பட்டுள்ளது. (இ-7)

பூச்சி மருந்து வில்லை தொண்டையில் சிக்கி 4 வயது சிறுமி பலி!

(கொழும்பு)

பாதுக்க கொரலஹிம அலுத்வத்த என்னும் இடத் தைச் சேர்ந்த சிறுமியொரு வர் பூச்சி மருந்து வில்லை தொண்டையில் சிக்கி பரி தாபமாக உயிரிழந்துள்ளார்.

நான்கு வயது தினுர திமான் தெவ்மிகா என்ற சிறுமியே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பி லான மரண விசாரணையின் போது குறித்த சிறுமியின் தாய் சாட்சியமளித்துள்ளார்.

அவரது சாட்சியத்தில், "உயிரிழந்திருப்பது எனது மகளாவார். மகளை சிகிச்சை நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருந்தேன். அதன்போது விற்றமின் மற்றும் பூச்சி மருந்து என்பன வழங்கப் பட்டன.

எடை குறைந்த காரணத் தினால் மருந்து வழங்கப்பட் டிருந்தது. மகள் மருந்து குடிப்பதற்கு விரும்பமாட்டார். அதனால் பணிக்குச் செல் வதற்கு முன்னதாக அவரது தந்தை பூச்சி வில்லையை இரண்டாக உடைத்து ஒரு பாதியை தண்ணீருடன்கொடுத் தார்.

பின்னர் மறு பாதியை யும் தொண்டையில் இட்டு தண்ணீர் கொடுத்தார் அப் போது மகள் "அப்பா" என சத்தமிட்டார். அதன் பின்னர் மகளின் முதுகில் பலமாக தட்டினோம், தலைகீழாக தொங்கவிட்டு தட்டினோம், பின்னர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றோம்.

அங்கிருந்து சிறுவர் நல வைத்தியசாலைக்கு மகள் மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி மகள் உயிரிழந் தார் என சிறுமியின் தாய் சாட்சியமளித்துள்ளார்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் சிறுமி பூச்சி மாத்திரை தொண்டையில் இறுகி உயிரிழந்துள்ளார் என கொழும்பு சட்ட வைத் திய அதிகாரி ராஹூல் அக் தெரிவித்தார். (இ-7)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதனகிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** சுருவில், மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களிலும் **வவு னியா பிரதேசத்தில** பண் டாரிக்குளம் கிராமம், தவ சிக் குளம் கிராமம், அட்டம் பஸ்கட கிராமம் ஆகிய பிர தேசங்களிலும் மின்தடைப்ப டும். (இ-9)

சட்ட வாரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

மே மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டுள்ள சட்ட வாரத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டு சட்டத்தி னால் ஒருவருக்குக் கிடைக் கக் கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இல ங்கை சட்டத்தரணிகள் சங் கம் பொதுமக்களிடம் கோரி க்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான உதய ரொஹான் டி சில்வா மேலும் தெரிவிக் கையில்,

நீதிமன்றம் அல்லது நீதி பதிகளால் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருக்குமாயின் அது தொடர்பாக முறைப்பாடு செய் வதற்குப் பின்வாங்காமல் இந்த சட்டவாரத்தை ஆரம்ப மாகக் கொள்ளுங்கள்.

மேலும், தொழிலின் கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலும் சேவை யைப் பெற்றுக் கொள்வதற் குத் தீங்கு ஏற்படும் வகை யிலும் செயற்படும் நீதிபதி களுக்கு எதிராக நடவடி க்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

மேலும், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றங்களில் இடம்பெறும் அநீதி தொடர் பாக, சட்டவாரத்தில் தெளிவுப டுத்துவதற்காக, 0777235 363, 0113133864, 011313 3872 என்ற இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறு இல ங்கை சட்டத்தரணிகள் சங் கம் அறிவித்துள்ளது. (இ-7)

நாமகள் வெற்றிக் கிண்ணம் இளவாலை யங்கென்றிஸ் வசம்

நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் உதைபந்தாட்டத் தொடர் நாமகள் வெற்றிக் கிண்ணத்தை சுவிகரித்தது இளவாலை யங்கென் றிஸ் அணி. கடந்த ஞாயிற்றுக்கி ழமை இடம் பெற்ற இறுதிப் போட்டி யில் இளவாலை யங்கென் றிஸை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் பலப் பரீட்சை நடத்தியது.

மிகவும் எதிர்பார்ப்புடன் பர பரப்பாக நடைபெற்ற போட்டியில் ஆட்டநேர முடிவில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் 4:1 என வெற்றி பெற்று வெற்றிக் கிண் ணத்தை தனதாக்கியதுடன், 100,000 பெறுமதியான பணப்பரிசையும் தட்டிச் சென்றது.

இரண்டாமிடம் பெற்ற சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றி கேடயமும் 50,000 பணப் பரிசும் வழங்கப்பட்டன.

மூன்றாமிடத்தை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிபெற்றது. அவர் களுக்கு வெற்றிக்கேடயமும் 25,000 பணப்பரிசும் வழங்கப்பட்டன.

நான்காமிடத்தை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது. இவர்களுக்கு வெற்றிக்கேடயமும் 13,000 பணப் பரிசும் வழங்கப்பட்டன. (க-106)

தூய ஒளி வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி முடிவுகள்

மண்டைதீவில் படுகொலை செய் யப்பட்ட 31 மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழகத்தின் அனுசரணையு டன் தூயஒளி வெற்றிக்கிண்ணத் திற்கான உதைபந்தாட்டத் தொடர் நடை பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் கொலினிஸ் விளை யாட்டுக் கழகத்தினை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட் டுக் கழகம் மோதியது.

இப் போட்டியில்2:0 என்ற கோல் கணக்கில் வேலணை ஐயனார் அணி வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றுமொரு போட்டி யில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மகாத்மாஜீ அணி மோதியது இப் போட்டியில் 4:1 என்ற கோல்கணக்கில் ஞான முரு கன் அணி வெற்றி பெற்றது. (க-106)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

கிளி.மாவட்டத்தில் சதுரங்கப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தினரால் வருடாந்தம் நடத் தப்படும் மாவட்ட மட்டத்திலான மாபெரும் சதுரங்கப் போட்டிகள் இம்மாதம் 26, 27 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ள இப் போட் டியானது 8 வயது, 10 வயது, 12 வயது , 14 வயது, 16 வயது, 18 வயது, 20 வயது, 20 வயதிற்கு மேற்பட்டோர் என்ற வயதுப்பிரி வுகளில் ஆண், பெண் என தனித் தனிப் பிரிவுகளாக பதினாறு பிரிவு களாக நடைபெறவுள்ளது.

8 வயது, 10 வயது, 12 வயது பிரிவுகளில் முதலாம் இடம் பெறுப வருக்கு 2500/- வும், 2 ஆம் இடம்பெறுபவருக்கு 1500/-வும், 3 ஆம் இடம் பெறுபவருக்கு 1000/- வும் ஏனைய வயதுப் பிரிவுகளில் முதலாம் இடம்பெறுப வருக்கு 5000/- வும் 2 ஆம் இடம்பெறுப வருக்கு 3000/-வும் 3 ஆம் இடம் பெறுபவருக்கு 2000/- வும் பணப் பரிசில்களாக வழங்கப்படவுள்ள துடன், ஒவ் வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுப வர்களுக்கு பதக்கங்கள், வெற் றிக்கிண்ணங்கள், வெற்றிச்சான்றி தழ்கள் என்பனவும் வழங்கப்படும்.

4 தொடக்கம் 10 வரையான இடங்களைப் பெறுபவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும், வெற் றிச்சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன.

போட்டியின் சகல சுற்றுக்களி லும் முழுமையாகப் பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றுனர் களுக்கான சான்றிதழ்கள் வழங் கப்படவுள்ளன.

போட்டிகளில் கிளிநொச்சி மாவ ட்ட பாடசாலை மாணவர்களும், 20 வயதிற்கு மேற்பட் டோர் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவி டமாகக் கொண்ட வெளி நபர்களும் கலந்து கொள்ளமுடியும்.

போட்டியாளர்களது வயது 31-12-2018 இல் உள்ளவாறு கணிப் பிடப்படும்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் உரிய மாதிரிப்படிவங்களில் தமது பெயர் களைப் பதிவு செய்து பாடசாலை ஊடாகவும், வெளிநபர்கள் நேரடி யாகவும் இம்மாதம் 24 ஆம் திக திக்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை தி.சிவ ரூபன், ஆசிரிய ஆலோசகர், வல யக்கல்வி அலுவலகம், கிளி நொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக தொடர்பு களுக்கு 077 699 1078 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும். (க)

சீமா விளையாட்டுக் கழகத்தால் ஒழுங்கமைத்து ஐக்கிய நாடுகள் நட்புறவு சமயத்தின் இணை அனுசரணையுடன் நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி CRC விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று, இந்த ஆண்டின் சம்பியன் பட்டத்தை தன் வசப்படுத்தியது. (க-29)

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான கபடிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை வீண்மீன் இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை பன்னாலை கணேசன் இளைஞர் கழகமும் பெற்றுக் கொண்டன.
(படங்கள் : புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

சுன்னாகம் பொலிஸ்...

அங்கு சுமணன் பொலிஸ் காவலிலிருந்து தப்பித்து இரணைமடுக் குளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸாரால் கிளிநொச்சி நீதவான் மன்றில் அறிக்கையிடப்பட்டது.

கைது செய்யப்பட்ட ஏனைய 4 சந்தேக நபர்களுக்கு எதிராக பெரும் குற்ற வழக்கு மல்லாகம் நீதவான் மன்றில் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன. 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த வழக்கின் விசாரணையின் போது சந்தேகநபர்களில் இருவர். சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸார் மீது சுமணனை சித்திரவதை செய்து கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஜ்ட்சன், "சந்தேகநபர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் பொலிஸாரிடம் விசாரணைகளை மேற்கொண்டு சித்திரவதை மற்றும் கொலை ஆகிய இரு பிரிவுகளில் வழக்குகளை முன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் நீதவான் அறிவித்தல் வழங்கினார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரை கிளிநெரச்சிக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்ட சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராக கொலை குற்றச்சாட்டு வழக்கை கிளிநொச்சி நீதவான் மன்றில் முன்வைத்தனர்.

அத்துடன், சட்டமா அதிபர் திணைக்களத்தால் பொலிஸ் அதிகாரி சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸாருக்கு எதிராக 1994 ஆம் ஆண்டு சித்திரவதைகள் சட்டத்துக்கு அமைவாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதில் சித்திரவதை வழக்கில் சிந்திக்க பண்டார உள்ளிட்ட 6 பொலிஸாருக்கும் 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவர் வெளிநாடொன்றில் வாழ்வதால் 5 பொலிஸாரே சிறையில் அடைக்கப்பட்டனர்.

5 தண்டனைக் கைதிகளும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து தமது சட்டத்தரணிகள் ஊடாக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

தமது மேன்முறையீட்டு மனு விசாரணையில் உள்ளதால் அதன் தீர்ப்பு அறிவிக்கப்படும்வரை தம்மை பிணையில் விடுவிக்கக் கோரி அவர்கள் 5 பேரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டின் போதான பிணை விண்ணப்பத்தை சீராய்வு மனு ஊடாக முன்வைத்தனர்.

இந்தச் சீராய்வு மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

சுமணனை கொலை செய்த குற்றச்சாட்டில் தண்டனைக் கைதிகளான மனுதாரர்கள் 5 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் பிணை வழங்கப்பட்டால் அந்த வழக்கில் பாதிப்பை ஏற்படுத்தும் உள்ளிட்ட முக்கிய காரணிகளை முன்வைத்து அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றில் எழுத்துமூல சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், பிணை விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து கட்டளை வழங்கினார்.

இதேவேளை, தடுப்புக் காவலிலிருந்த சந்தேகநபரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் விளக்கமறியல் உத்தரவை எதிர்த்து சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸார் சார்பிலும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த ஆண்டு பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

குருநகரிலுள்ள கடற்படை...

அபைந்து கொடுக்கப்படவில்லை. விற்பனைக்கு ஏற்ற இடம் இல்லை. 500 க்கும் மேற்பட்ட ஒருநாள் [illegible] (படகு) தற்போது அங்கு உள்ளன. அவற்றுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக பெரும் சிரமத்தை மீனவர்கள் எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

இதனால் மீனவர்களின் அடிப்படை தேவை கருதி அப்பகுதியில் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்து தரும் படி மீனவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் நோர் சீ நிறுவனத்துக்கு அருகில் உள்ள காணியில் உள்ள இராணுவத்தினர் வெளியேறிய நிலையில் அக்காணியை பொது தேவைக்கு பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் மற்றும் அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் வெளியேற்றப்பட்டு அங்கு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என பலரால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனை தொடர்ந்து குறித்த குருநகர் இறங்கு துறை பகுதியில் கடற்படை நிலை கொண்டுள்ள காணியை பொதுமக்களின் பொதுத் தேவை கருதி அப்பகுதியில் இருந்து படையினர் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் வெளியேற வேண்டும் என கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறித்த தீர்மானம் படையினருக்கும் அனுப்பி வைக்கப்படும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

இந்திய முக்கியஸ்தர்கள்...

இந்தியாவின் முக்கியஸ்தர்கள் சிலர் நேற்று சென்று சந்தித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து வருகைதந்த தடாச்சட்ட சிறப்பு சட்டவாளர் சந்திரசேகரன் மற்றும் இன்னும் பல சட்டவாளர்கள் ஆகியோர் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து குறித்த சந்திப்பை மேற் கொண்டுள்ளனர்

இதன்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இந்தவிடயத்தில் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் மக்களிடம் கேட்டறிந்துகொண்டனர்.

மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் மக்கள் இதன்போது இவர்களிடத்தில் தெரிவித்தனர். (ம-281)

தங்கக்கட்டிகளுடன்...

ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

700 கிராம் எடையுடைய 4,760,000 பெறுமதியான தங்கம் இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

போலி பெல்ட்களிலும் பாதணியின் கீழும் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்ககட்டிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடக பேச்சாளர் தெரிவித்தார். (ம)

மண்டைதீவு காணி...

வேலணை பிரதேச செயலகர் பிரிவில் ஜே 07 மண்டதீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மண்டதீவு கிராமத்தில் அமைந்துள்ள 18 ஏக்கர், ஒரு றூட், 10 பேர்ச் அளவுடைய காணி சுவீகரிக்கப்படவுள்ளதாக அண்மையில் அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

மண்டைதீவு பகுதியில் வயல் காணி மற்றும் தோட்ட நிலங்களை கடற்படையினர் கையகப்படுத்தவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் பொதுமக்களுடைய காணிகளை இராணுவத்தினர் அடாத்தாக பிடித்து வைத்துள்ளனர்.

பின்னர் அவற்றை சுவீகரிப்பதற்கு அதிகாரிகளின் உதவியை நாடுகின்றனர். வலுக்கட்டாயமாக செயற்பாடுகள் செய்ய வைப்பதுமான தொடர் நடவடிக்கை குடாநாடு முழுவதும் இடம்பெற்று வருகிறது. இந் நிலையில் வலி வடக்கு பகுதியில் சில காணிகளை விட்டிருந்தாலும் மேலும் காணிகள் படையினரின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது.

அதே போன்று 990ஆம் ஆண்டு தீவகத்தை ஆக்கிரமித்த கடற்படையினர், பல பொதுமக்களின் காணிகள் நிலங்களை அபகரித்து வைத்துள்ளார்கள். அத்துடன் பல கொலைகள் கடத்தல்களும் தீவகத்தில் அரங்கேறியுள்ளது. இன்று வரை தமது இடத்தில் மீள குடியேற முடியாமல் பொதுமக்கள் பல துன்பங்களை தற்போதும் அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலையில் மேலும் மண்டைதீவு பகுதியில் ஒரு அங்குல நிலத்தை கூட கடற்படையினருக்கு விட்டுக்கொடுப்பதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். அதிகாரிகளும் இந்த நடவடிக்கைக்கு துணை போக கூடாது. காணி அளக்க முற்பட்டால் பொதுமக்களை அழைத்து போராட்டத்தை மேற்கொள்வோம்.

அனைவராலும் கைவிடப்பட்ட பகுதியாக மண்டைதீவு [illegible] பூமியாக தற்போது மாறியுள்ளது. தொழில் ஏதும் இன்றி அங்குள்ள மக்கள் நாளாந்தம் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறார்கள் இந்த நிலையில் மிஞ்சி இருக்கும் காணிகளை சுவீகரிப்பதற்கு நாம் விட மாட்டோம்.

இதை ஒரு எச்சரிக்கையாக சம்பந்தப்பட்டவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். அதை மீறி செயற்பட்டால், நில அளவை திணைக்களத்தை முற்றுகையிட்டு பாரிய போராட்டத்தை முன்னெடுப்பதுடன் இந்த செயற்பாட்டை நிறுத்துவோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

இராணுவ கப்டன்...

கப்டன் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

விசுவமடு தேராவில் பகுதியில் 68 ஆவது படைப்பிரிவின் 3ஆவது படையினர் நிலை கொண்டுள்ள நூறு ஏக்கருக்கும் அதிகமான விவசாய பண்ணை ஒன்றில் படையினரின் சட்டவிரோதமான மின் இணைப்பில் சிக்குண்ட யானை ஒன்று உயிரிழந்துள்ளது

இந்த உயிரிழப்பு தொடர்பில் மருத்துவ அறிக்கையினை கொடுத்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவ அதிகாரி படையினரின் மின் சார கம்பியில் சிக்குண்டே யானை உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து வனஜீவராசி திணைக்களத்தினர் குறித்த படைமுகாம் அதிகாரியின் சட்டவிரோத நடவடிக்கை தொடர்பில் வழக்கு பதிவு செய்துள்ளார்கள். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் குறித்த படைமுகாமின் கப்டனை கைதுசெய்துள்ளதுடன் அவரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள்

குறித்த கப்டன் ஓர் இலட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பிலான வழக்கினை அடுத்த மாதம் 08 ஆம் திகதி விசாரிக்கவுள்ளதாகவும் நீதவான் அறிவித்துள்ளார். (ம)

ஜின் மாதம் முதல்...

பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதுள்ள அரசாங்கம் பதவி விலக வேண்டும், இவர்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என் முன்னாள் வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்ட கருத்துக்கு பதில் அளிக்கும் போதே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை கூட்டு எதிர்க்கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து எதிர்வரும் ஜின் மாதம் முதல் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாகவும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மக்களுக்கு எதிராக செயற்படுகிறது எனவே, மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட அரசாங்கம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவியை பெற்றுக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

கனடாவில் வசிக்கும் தமிழ் மக்களோடு உங்கள் வர்த்தகங்களை விஸ்தரித்து வருமானத்தை பெருக்கிக்கொள்ளுங்கள்.

(4165)

மேலதிக தொடர்புகளுக்கு

077 277 2431

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

OBTAINING LEGAL CONSULTATION SERVICES

Applications are invited from qualified Attorney at Laws With not less than three years experience in Court Work,Legal Work relating to corporations/ Companies and drafting legal documents.

The execution of Bond and Agreement'task is expected to be carried out under this.

Those who are Willing to apply can send their Bio Data with two recent testimonials from non related referees for registering with the university of Jaffna.

You are requested to send the applications to deputy Registrar/Academic Establishments,University of Jaffna to reach on or before 30.06.2018

Registrar
University Of Jaffna
15.05.2018

(C-2681)

கண்ணீர் அஞ்சலி

திருமதி
வரதராஜன் சகுந்தலா

எமது நிறுவனத்தின்
முன்னைநாள்
பொருளியல் ஆசான்
S.வரதராஜன் அவர்களின்
அன்புத் துணைவியார்
வரதராஜன் சகுந்தலா
இறைபதம் அடைந்ததை
இட்டு எமது
கண்ணீர் அஞ்சலிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

DCM
(கல்விச் சமூகம்)

(A-2682)

விற்பனைக்கு

✷ மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம். யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை (3000) தொடர்புகளுக்கு 077 357 3055

இளம்... த்தில் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சுன்னாகம் ஏழாலை மேற்கை சேர்ந்த கனகசபாபதி கௌரிதரன் (வயது 37) என்ற குடும்பஸ்தரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் கடந்த இரு மாதங்களாக மேற்குறித்த மதுபான நிலையத்தில் முகாமையாளராக பணிபுரிந்து வருகிறார். நேற்று உணவு அருந்திய பின்னர் படுக்கைக்கு சென்றுள்ளார். காலை ஊழியர்கள் சென்று பார்த்த போது இவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்ததுடன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

Urgently Required
உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச கம்பனியுடன் இணைந்து பணிபுரியும் வாய்ப்புக்களை வழங்கிவரும் Granton (PVT) Ltd, மேலும் தனது புதிய கிளைகளை ஆரம்பிக்கிறது.

குறைந்த தகைமை O/L, School leavers விண்ணப்பிக்கலாம்.

★ பயிற்சிகள் இல்லாதவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.
★ பயிற்சியின் போது 15000-18000 பின்னர் குறைந்தது 45000 வரை.

மேலதிக தொடர்புகளுக்கு:-
423, Stanly Road, Jaffna.
0767707759, 0778021371

வெளிவந்து விற்பனையாகிறது

பொது அறிவு -2018

ரூபாய்-700

பொது அறிவும் நுண்ணறிவும்

ரூபாய்-650

முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள்

P.கமல்தாசன் -SLPS

பூபாலசிங்கம் புத்தகசாலை -யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

(மிகுந்தவைகளுக்குட்பட்டது)

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

ஜசுபி பழரசத் தொழிற்சாலை
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வது)
JACHUFI Fruit Based Factory
CHUNNAKAM MPCS Ltd

எமது நோக்கு

வட மாகாணத்தில் முதல்தர உணவு பதனிடல் தொழிற்சாலையாக நாம் தொழிற்படுவோம்.

எமது இலக்கு

"எமது மதிப்பிற்குரிய நுகர்வோருக்கு பல்வேறுபட்ட பாதுகாப்பான, போஷாக்கான,தரமான, இயற்கையான பழம்சார் உற்பத்திகளை நியாய விலையில் யாழ்ப்பாண உற்பத்திக்கான நவீன தொழில்நுட்பத்துடன் சமூக வலுவூட்டப்பட்ட அர்ப்பணிப்புள்ள தொழிலாளர்களைக் கொண்டு நியாயமான பிரதிபலன்கள் சமூகப் பொறுப்பானவர்களுக்கு கிடைக்க வழியமைத்தல்"

எமது உற்பத்திகள்

* நெல்லிக் கிரஸ்
* கிரேப்ஸ் கோடியல்
* ஒரேஞ் கோடியல்
* மிக்ஸ் புறூட் கோடியல்
* மிக்ஸ்புறூட் ஜாம்
* அன்னாசி ஜாம்
* ஸ்ரோபெரி ஜாம்
* விளாம்பழ ஜாம்
* மாம்பழ உடனடி பானம்

மேற்படி உற்பத்திகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(C-2665)

ஜசுபி பழரசத் தொழிற்சாலை
ஆலடி. மானிப்பாய் வீதி,
உடுவில்.
T.P.No- 021 225 6065
E-mail : jachufijaffna@gmail.com

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வது)
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
T.P.No- 021 2243627
E-mail : chunnakammpcs1557@gmail.com

கண்ணீர் காணிக்கை

செல்லத்துரை இராசம்மா
(மகேஸ்வரி)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும் நல்லூர்/கோப்பாய் கிளை அங்கத்தவரும் ஸ்ரீ முருகன் பேக்கரி உரிமையாளருமாகிய திரு.செ.சுரேஸ்குமார் அவர்களின் அன்பு மாமியாரும் சங்க கணனி மேற்பார்வையாளர் திரு.கிருபாகரன் அவர்களின் அன்புத்தாயாருமாகிய அமரர் செல்லத்துரை இராசம்மா (மகேஸ்வரி) 20.05.2018 அன்று காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.

(சு-2679)

மரண அறிவித்தல்

திருமதி கனகம்மா அப்பாப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா அப்பாப்பிள்ளை அவர்கள் நேற்று (21.05.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - தங்கம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ் சென்ற பெரியதம்பி அப்பாப்பிள்ளை (ஸ்ரீமுருகன் அச்சகம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், பராசக்தி, சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், துரைசிங்கம் (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கம்), இரத்தினவேல் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், அமரர் மகேஸ்வரி, தியாகராஜா, ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வமலர், பாலசந்திரமூர்த்தி, அருணகிரிநாதன் (நோர்வே), சற்குணதேவி, சிவயோகநாதன், பரந்தாமன் ஆகியோரின் சிறியதாயும், செல்வராசா (ஓய்வுபெற்ற பல்நோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர், பரந்தன்) ஜோகேஸ்வரி (நோர்வே), Dr.சிங்கஅரியரத்தினம், தமிழரசி, சறோ ஆகியோரின் மாமியும், லலிதா ஜெனனன் (லண்டன்), ரஜீவ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ரவிராஜ் (தொல்பொருள் திணைக்களம், மன்னார்), விசுவராஜ் (புலனாய்வு உத்தியோகத்தர், முல்லைத்தீவு), சயந்தன் (ஜேர்மனி), தர்ஷிகா (ஜேர்மனி), நிசாந்தன் (ஜேர்மனி), அபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனிகா (லண்டன்), யாமினி (ஜேர்மனி), விஷ்ணு (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2018) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.
0217900192, 0776159141 (4160)

தகவல்:
குடும்பத்தினர்

வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் ஏரம்பு ஜெகதீஸ்வரன்
(திருநா)
(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.05.2018) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

அன்னை இல்லம்
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.